பக்கங்கள்:-37

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | வைகாசி 05 | ஞாயிற்றுக்கிழமை | 19.05.2024 | அதிர்வு 292

## ரணிலே ஒரே தீர்வு!

### மொட்டுக் கட்சியினருக்கு அமைச்சர் சுசில் அறிவுரை



"ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க களமிறங்குவதே சிறந்தது. அவருக்கே சவாலை 06▶

# தமிழரின் சுயாட்சியை அங்கீகரிக்க வேண்டும்

### முள்ளிவாய்க்கால் பிரகடனத்தில் வலியுறுத்து



"தமிழர்கள் ஒரு தேச அங்கீகாரத்துக்குரியவர்கள் என்பதோடு அவர்களின் தனித்துவமான இறையாண்மையின் அடிப்படையிலும், ஒருபோதும் பராதீனப்படுத்தவியலாத சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலும் அவர்களின் சுயாட்சியை அங்கீகரிக்க வேண்டும்."

- இவ்வாறு தமிழினப் படுகொலையின் 15ஆம் ஆண்டு நினைவேந்தலையொட்டி முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் வைத்து நேற்று வெளியிடப்பட்ட முள்ளிவாய்க்கால் பிரகடனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. 06▶

## கிழக்குப் பல்கலையில் பொலிஸின் அடாவடி: யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் கண்டனம்




"முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை நினைவேந்தலைக் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முன்னெடுத்துக் கொண்டிருக்கையில் பொலிஸார் அநாகரிக மற்றும் அடாவடியான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். நினைவுகூரல் உரிமையை மறுக்கின்ற இலங்கை அரசின் இந்தச் செயல்களை வன்மையாகக் கண்டிக்கின்றோம்."

– இவ்வாறு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:- 06▶

## ஜனாதிபதித் தேர்தலில் சஜித் போட்டியிட்டால் தோல்வி உறுதி

### ரணிலுடன் சேர்ந்தால் பிரதமராகலாம் என்று ஐக்கிய தேசியக் கட்சி அழைப்பு



"ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்தால் சஜித் பிரேமதாஸவின் அரசியல் வாழ்வு முடிந்துவிடும். எனவே, பிரதமர் வேட்பாளர் பதவியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து செயற்படும் முடிவை அவர் தற்போது எடுக்க வேண்டும்."

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தரான அமைச்சர் 06▶



ஜனாதிபதித் தேர்தல் பெரும்பாலும் ஒக்டோபர் ஐந்தாம் திகதி நடைபெறும் எனத் தேர்தல் ஆணையகத்துடன் தொடர்புடைய வட்டாரங்கள் கூறுகின்றன.

ஜனாதிபதித் தேர்தல் சட்ட விதிகளின்படி, கடந்த ஜனாதிபதி தேர்தலின் பின்னர் 2019 நவம்பர் 17ஆம் திகதி ஜனாதிபதி பதவியேற்றபடியால் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் செப்டம்பர் 17ஆம் திகதிக்கும் ஒக்டோபர் 16ஆம் திகதிக்கும் இடையில் நடத்தப்பட்டு முடிவுறுத்தப்பட வேண்டும்.

வழமையாக சனிக்கிழமைகளில்தான் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப் 06▶




# வரலாற்றுச் சிறப்பு மிக்க சீதையம்மனின் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா இன்று

வரலாற்றுச் சிறப்பு மிக்க நுவரெலியா சீதாஎலிய சீதையம்மன் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா இன்று இடம்பெறவுள்ளது.

இதற்காக அயோத்தி இராமர் கோயில் மற்றும் சீதை பிறந்த இடமான நேபாளம் ஆகிய இடங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட சீதையம்மனுக்கான சீர்வரிசைப் பொருள்கள் மற்றும் இந்திய புண்ணிய நதிகளின் தீர்த்தம் என்பவற்றை தாங்கிய ஊர்தி நேற்று சீதையம்மன் ஆலயத்தை சென்றடைந்துள்ளது.

கொழும்பு – மயூராபதி ஆலயத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற சிறப்பு பூஜைகளைத் தொடர்ந்து தீர்த்த ஊர்தி ஊர்வலமானது கொள்ளுப்பிட்டி இந்திய உயர்ஸ்தானிகரகத்தை சென்றடைந்தது.

இதனையடுத்து, தீர்த்த ஊர்தியானது காலி முகத்திடல் ஊடாக கொழும்பு பிரதான வீதி, செட்டியார் தெரு, ஆமர் வீதி, கடுவலை, அவிசாவளை, யட்டியாந்தோட்டை, ஹட்டன், கொட்டகலை, தலவாக்கலை, பூண்டுலோயா, தவலந்தனை சந்தி ஊடாக இறம்பொடை ஸ்ரீ ஹனுமான் ஆலயத்தை நேற்று முன்தினம் மாலை சென்றடைந்தது.


இறம்பொடை ஶ்ரீ ஹனுமான் ஆலயத்தில் நேற்று காலை 7 மணிக்கு இடம்பெற்ற பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து நுவரெலியா நகரம் ஊடாகத் தீர்த்த ஊர்தி சீதாஎலிய சீதை அம்மன் ஆலயத்தைச் சென்றடைந்துள்ளது.

இதேவேளை, நுவரெலியா சீதாஎலிய சீதை அம்மன் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகப் பெருவிழாவில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன கலந்து கொள்ளவுள்ளார்.

அத்துடன், மனித நேயத் தலைவர், ஆன்மீக குரு, அமைதித் தூதுவர் மற்றும் வாழும் கலை பயிற்சியின் நிறுவுனர் பூஜ்ய ஸ்ரீ ரவிசங்கர் இந்தக் கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து கொள்வதற்காக நேற்று இலங்கை வந்துள்ளார்.



# தமிழர்களின் உரிமையை வலியுறுத்தி அமெரிக்க காங்கிரஸில் பிரேரணை


CONGRESSMAN WILEY NICKEL
SERVING NORTH CAROLINA'S 13TH DISTRICT

118TH CONGRESS 2D SESSION H. RES. ____

Recognizing the hundreds of thousands of lives lost during Sri Lanka's almost 30-year armed conflict, which ended 15 years ago on May 18, 2009, and ensuring nonrecurrence of past violence, including the Tamil Genocide, by supporting the right to self-determination of Eelam Tamil people and their call for an independence referendum for a lasting peaceful resolution.

IN THE HOUSE OF REPRESENTATIVES

Mr. NICKEL submitted the following resolution; which was referred to the Committee on ____

RESOLUTION

Recognizing the hundreds of thousands of lives lost during Sri Lanka's almost 30-year armed conflict, which ended 15 years ago on May 18, 2009, and ensuring nonrecurrence of past violence, including the Tamil Genocide, by supporting the right to self-determination of Eelam Tamil people and their call for an independence referendum for a lasting peaceful resolution.

Whereas May 18, 2024, marks the 15-year anniversary of the end of the 26-year armed conflict between the Government of Sri Lanka and various armed Tamil independence organizations;



தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்காக அமெரிக்கா பணியாற்ற வேண்டுமென வலியுறுத்தும் முக்கியத்துவம் வாய்ந்த பிரேரணை ஒன்று அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் விலே நிக்கலினால் அமெரிக்க காங்கிரஸில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானமானது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கும், நிலையான தீர்வை அடைந்து கொள்வதற்கும் பொதுஜன வாக்கெடுப்பொன்றை நடத்துமாறு வலியுறுத்துவதுடன், மக்களால் முன்வைக்கப்படும் கோரிக்கைக்கு ஆதரவளித்து, கடந்தகால மீறல்கள் மீண்டும் நிகழாதிருப்பதை உறுதிப்படுத்துமாறும் வலியுறுத்துகின்றது.

வட்டுக்கோட்டை தீர்மானத்தை ஏற்று, தமிழ் தேசத்தின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தியமை, 1983ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட அரசமைப்பிற்கான 6 ஆவது திருத்தத்தின் ஊடாக தமிழ் மக்கள் தமது சுதந்திரத்திற்காக வாதிடும் திறன் மட்டுப்படுத்தப்பட்டமை, 1987 இல் அரசமைப்பிற்கான 13 ஆவது திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டமை உள்ளடங்கலாக தமிழர்களின் அரசியல் போக்கை நிர்ணயித்த முக்கிய வரலாற்று நிகழ்வுகளும் இந்தப் பிரேரணையில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

யுத்தம் முடிவிற்கு கொண்டுவரப்பட்டு 15 ஆண்டுகள் நிறைவடைந்த போதிலும், தமிழர் தாயகப் பகுதிகளில் பெரும்பாலானவை இராணுவமயமாக்கப்பட்டுள்ளமையுடன், பொறுப்புக்கூறல் நீதி மற்றும் அரசியல் தீர்வு ஆகிய விடயங்களில் இன்னும் குறிப்பிடத்தக்களவிலான முன்னேற்றம் எட்டப்படவில்லை என அந்தப் பிரேரணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், தமிழர்களுக்கு எதிரான கடந்தகால மீறல்கள் மீண்டும் நிகழாமல் இருப்பதற்குரிய போதிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ் மக்களுடான இராஜதந்திர தொடர்புகளை வலுப்படுத்துவதுடன் இந்திய பசுபிக் மற்றும் தெற்காசிய பிராந்தியத்தின் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மை என்பவற்றை முன்னிறுத்தி, அமெரிக்கா அவர்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழர்களின் அரசியல் உரிமைகளை பாதுகாக்கவும், அவற்றுக்காக வாதிடவும் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுஜன வாக்கெடுப்பொன்றை அமெரிக்கா நடத்த வேண்டும் எனவும் அந்தப் பிரேரணையில் பிரதானமாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

# 13,752 கஞ்சாச் செடிகளுடன் ஹம்பேகமுவயில் ஒருவர் கைது

ஹம்பேகமுவ பொலிஸ் பிரிவிற்குற்பட்ட பலுப்பிட்டிகன்த பிரதேசத்தில் 13 ஆயிரத்து 752 கஞ்சா செடிகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலம்பகேயார பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயது நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணையில் சந்தேக நபரிடமிருந்து 13 ஆயிரத்து 752 கஞ்சா செடிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹம்பேகமுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







# மன்னார் சிறுத்தோப்பில் புதையல் தோண்டிய கடற்படை அதிகாரி உட்பட ஏழு பேர் கைது!

(மன்னார் நிருபர்)

மன்னார் – பேசாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சிறுத்தோப்புக் காட்டுப்பகுதியில் புதையல் தோண்டினர் எனக் கூறப்படும் நிலையில் கடற்படை அதிகாரி ஒருவர் உள்ளடங்கலாக 7 பேர் நேற்று சனிக்கிழமை மாலை கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைக்காக பேசாலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இராணுவப் புலனாய்வுத் துறையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மன்னார் மற்றும் பேசாலை பொலிஸார் இணைந்து நேற்று சனிக்கிழமை மாலை 4 மணியளவில் பேசாலை பொலிஸ் பிரிவில் உள்ள சிறுத்தோப்பு காட்டுப்பகுதியில் திடீர் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன் போது புதையல் தோண்டிய நிலையில், புதையல் தோண்டும் உபகரணங்களுடன் 7 பேரைப் பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் திருகோணமலை கடற்படை முகாமில் கடமையாற்றும் கடற்படை அதிகாரி எனத் தெரிய வந்துள்ளது. ஏனையவர்கள் தென்பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் கூறப்பட்டது. கைது செய்யப்பட்டவர்கள் பேசாலை பொலிஸாரிடம் மேலதிக விசாரணைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் அவர்கள் பயன்படுத்திய இரண்டு வாகனங்கள் ஸ்கேனர் இயந்திரம், மந்திரப் பூஜைப் பொருள்கள் ஆகியவையும் மீட்கப்பட்டு பேசாலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளை பேசாலைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.





# மண்சரிவு எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில்

நாட்டிலுள்ள 8 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில் உள்ளது.

இதன்படி பதுளை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை மற்றும் குருணாகல் ஆகிய மாவட்டங்களுக்கு இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் அறிவித்துள்ளது.

இதேவேளை, சீரற்ற காலநிலை காரணமாக எல்ல – வெல்லவாய வீதி நேற்று இரவு 8 மணி முதல் இன்று காலை 6 மணி வரை மீண்டும் மூடப்பட்டது.

கரந்தகொல்ல – மலித்தகொல்ல பகுதியில் மண்சரிவு ஏற்பட்டதைத் தொடர்ந்து மேற்படி பகுதியிலிருந்து பெருமளவிலான சேற்று நீர் வெளியேறுவதால் பொதுமக்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

# எலுமிச்சை விலை சடுதியாக உயர்வு



சந்தையில் எலுமிச்சை மற்றும் இஞ்சியின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது.

இதன்படி ஒரு கிலோ கிராம் எலுமிச்சையின் சில்லறை விலை 2,000 ரூபாவை எட்டியுள்ளது.

அத்துடன், ஒரு கிலோகிராம் இஞ்சியின் விலை 3,000 ரூபாவைக் கடந்துள்ளதாக சந்தைத் தரவுகள் தெரிவிக்கின்றன.

INDSRI FERRY

# வருந்துகின்றோம்

தவிர்க்கமுடியாத கடல் போக்குவரத்து விதிமுறைகளினாலும் காலனிலை மாற்றங்களினாலும் எமது திட்டமிட்ட நாகை – காங்கேசன் – நாகை பயணிகள் கப்பல் சேவையினை இயக்கமுடியவில்லை.

**மிக விரைவில் புதிய பயணத் திகதிகள் அறிவிக்கப்படும்.**

**இதுவரை பயணச் சீட்டை பெற்றவர்கள் செலுத்திய கட்டணத்தினை முழுமையாக மீளளிக்க ஏற்பாடுகள் செய்துள்ளோம்.**

மேலும் விவரங்கள் தேவையெனில் customer.care@sailindsri.com என்ற மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.



IndSri Ferry Services Pvt Ltd
# 143/1, Uttamar Gandhi Road, Opp The Park Hotel,
Thousand Lights West, Nungampakkam,
Chennai - 600034, Tamil Nadu, India.

Google play
Download on the App Store

W: www.sailindsri.com

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
படுகின்றது. அந்த வகையில் செப்டம்பர் 21, 28 மற்றும் ஒக்டோபர் 05, 12 ஆகிய திகதிகள் உள்ளன. இவற்றில் செப்டம்பர் 5ஆம் திகதியை ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு நாளாக தேர்தல் ஆணையம் தீர்மானித்துள்ளது எனத் தெரிகின்றது.

இதற்கிடையில் நாடாளுமன்றத் தேர்தலை முற்கூட்டிய நடத்தும் திட்டம் குறித்தும் பேசப்படுகின்றது.

ஜுலை 15ஆம் திகதிக்கு முன்னர் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் மட்டுமே ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தலை நடத்த முடியும் என்றும் –

அதற்குப் பின்னர் நாடாளுமன்றம் கலைக்கப்படுமானால் பொதுத் தேர்தலை ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னரே நடத்தக்கூடியதாக இருக்கும் என்றும் –

தேர்தல் ஆணைய வட்டாரங்கள் கூறுகின்றன.

தேவைப்பட்டால் இரண்டு தேர்தல்களையும் குறுகிய இடைவெளிக் காலத்தில் நடத்தக்கூடிய முன்னாயத்தத் தயார் நிலையில்தான் தேர்தல் ஆணையம் இருப்பதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

ஜனாதிபதி மற்றும் அரச தரப்பினருடன் நெருங்கிப் பழகும் எதிர்க்கட்சி எம்.பி. ஒருவருடன் நேற்றிரவு தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்தேன். ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தல் நடக்கும் என்று அவர் அடித்துக் கூறினார்.

பொறுத்திருந்து பார்ப்போம்.

## கிழக்குப் பல்கலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
"கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பொலிஸாரின் அடாவடி என்பது அண்மைக் காலங்களில் பெருமளவில் அதிகரித்திருப்பது இங்கே சுட்டிக்காட்டப்பட வேண்டியுள்ளது.

கடந்த 27.11.2023 அன்று மாவீரர் நாள் நிகழ்வுகளைப் பொலிஸார் அத்துமீறி பல்கலைக்கழக முதன்மை வளாகத்தினுள் நுழைந்து குழப்பங்களை ஏற்படுத்தித் தடுத்து நிறுத்தியிருந்ததோடு, சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கை நிறுவக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த நினைவேந்தல் வளைவை அகற்றிச் சென்றமையையும் இங்கே பதிவு செய்ய வேண்டும்.

தமிழர் தாயகத்தில் கேள்விக்குள்ளாக்கும் நினைவுகூரும் உரிமை தொடர்பில் கடந்த 16.05.2024 அன்று வெளியிட்ட அறிக்கையில் கிழக்கு மாகாணத்தில் முடிவுற்றுத் தொடரும் இதுபோன்ற நினைவேந்தல்களைத் தடுக்கும் மற்றும் அச்சுறுத்தும் செயற்பாடுகள் தொடர்பில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தனது அவதானிப்பைச் செலுத்தியிருந்தது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர்கள் தமது பெரும்பான்மையை இழந்துள்ள நிலையில், தமிழ் மக்களின் உரிமைக்கான பயணத்தில் எம்மோடு தோளோடு தோள் நின்று பயணிக்கும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களின் தொடர்ச்சியானதும் தன்னெழுச்சியானதுமான செயற்பாடுகளைத் தடுக்கும் செயற்பாடுகளின் அங்கமே இதுபோன்ற விதிகளுக்குப் புறம்பான ஒடுக்குமுறைகளின் நோக்கமாகும்.

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களின் காத்திரமான முன்னோக்கிய பயணங்களுக்குப் பிராந்தியத்தின் சிவில் சமூகங்களும் செயற்பாட்டாளர்களும் பக்கபலமாகத் திகழவேண்டும் என்பதோடு, "பல்கலைக்கழகத்தை சமூகத்தினுள்ளும் சமூகத்தை பல்கலைக்கழகத்தினுள்ளும் கொண்டு செல்வதுமே" பொருத்தமான வழியாகும் என்பதனைப் பதிவு செய்கின்றோம்." – என்றுள்ளது.

## ரணிலே ஒரே தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
எதிர்கொண்ட அனுபவம் உள்ளது. இதனை மொட்டுக் கட்சியினர் கவனத்தில்கொள்ள வேண்டும்."

– இவ்வாறு அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"புதிய அரசியல் கூட்டணிகள் விரைவில் உதயமாகும். எனவே, மக்கள் நலன் சார்ந்த அதேபோல் எமது கொள்கையுடன் ஒத்துப்போகக்கூடிய தரப்புடன் இணைந்து நாடாளுமன்றத் தேர்தலைச் சந்திப்பேன்." – என்றார்.

அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தற்போது சுயாதீனமாகச் செயற்படுவதுடன், நிமல் லான்சா தரப்புடன் இணைந்து செயற்பட்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதித் தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"சஜித் பிரேமதாஸவை பிரதமர் வேட்பாளர் பதவியை ஏற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து செயற்படுமாறு நான் மீண்டும் அழைப்பு விடுக்கின்றேன். ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் அவர் ஐந்து வருடங்கள் கற்றுக் கொண்டால் நிச்சயம் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்க முடியும்.

அவ்வாறு இல்லாமல் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்க முற்பட்டால் இறுதியில் தோல்வி ஏற்படும். இவ்வாறு இரு தடவைகள் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்தால் அத்துடன் அவரின் அரசியல் வாழ்வும் முடிந்துவிடும். எனவே, சஜித்துக்கு மூளை இருந்தால் அவர் சாதகமான முடிவை எடுக்க வேண்டும்." – என்றார்.

## தமிழரின் சுயாட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

"எமது பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய எம் மக்களே!

தமிழினப் படுகொலை முள்ளிவாய்க்காலில் உச்சந்தொட்டு 15 ஆண்டுகள் நிறைவடைகின்றன. ஒவ்வொரு படுகொலைக்குப் பின்னரும் "இனிமேல் இது நடக்கவே கூடாது" என்ற உணர்வு பிரவாகம் வலுவாக எழுந்தாலும், அதுவே தொடர்கின்றது. இனிமேல் நடக்கவே கூடாது என்ற உணர்வு பிரவாகம் அர்த்தமற்றதாகிவிட்டது.

ஈழத் தமிழினப் படுகொலை ஒரு வரலாற்று செயன்முறையாக காலனித்துவத்திலிருந்து ஆரம்பித்து குறிப்பாக பிரித்தானிய காலனித்துவத்தில் 1833இல் தமிழ், சிங்கள இராச்சியங்களை ஒன்றுபடுத்தி, பிரித்தானிய காலனித்துவம் ஒற்றையாட்சி அரசியல் அலகை சிலோனில் அறிமுகப்படுத்துவதிலிருந்து தொடங்கி தமிழினப் படுகொலை வரலாற்று செயன்முறையாகப் பரிணமித்து முள்ளிவாய்க்கால் மண்ணில் 2009இல் உச்சந்தொட்டது.

பிரித்தானிய காலனித்துவம் அறிமுகப்படுத்திய ஒற்றையாட்சி அரசியல் அலகு, சிங்களப் பெரும்பான்மையிடம் அரசியல் அதிகாரத்தை மையப்படுத்தி குவிக்கப்பட்ட அதிகார செயன்முறை சிங்கள அரசுக்கு வன்முறை மீது ஏகபோக உரிமையைக் கொடுத்து அதை "பெரும்பான்மை ஜனநாயகம்" சட்ட வலுவாக்கம் செய்தது.

பிரித்தானிய காலனித்துவத்தின் புவிசார் அரசியலை மையப்படுத்திய மகாவம்ச மீள் வாசிப்பும், மகாவம்ச சிந்தனை மனநிலையும் சிங்கள தேசிய பேரினவாதத்தின் எழுச்சிக்கு வழிகோலி 19ஆம் நூற்றாண்டின் சிங்கள – பௌத்த தேசிய வாதத்தின் எழுச்சி "புத்தரால் வாக்களிக்கப்பட்ட நிலத்தை" மீளப்பெறுவதை மையமாகக்கொண்டு "புத்தரால் வாக்களிக்கப்பட்ட தேசம்" அரசியல் மயப்படுத்தப்பட்டு, இந்தத் தீவு சிங்கள – பௌத்தத்துக்கு மட்டுமானது என்று ஏகபோக உரிமையை சிங்கள – பௌத்த தேசியம் கையில் எடுத்தது.

வாக்களிக்கபட்ட தேசம் என்கின்ற தன்னிச்சையான அரசியல் நிலைப்பாடு இந்தத் தீவின் ஏனைய இனக்குழுக்களின் இருப்பைக் கேள்விக்குட்படுத்தி தமிழினப் படுகொலையின் வழிவரைபடம் பேரரசுக் கட்டமைப்பின் புவிசார் அரசியல் நலன்களைத் தவிர்த்து உருவாக்கப்படவில்லை என்பது IaKw தெரிகின்றது.

புவிசார் அரசியல் நலன்களின் பிராந்திய தளங்களில் ஏகாதிபத்தியத்தை தக்கவைப்பதற்காக பேரரசுக் கட்டமைப்பை துணைக் குத்தகைக்கு விட்டதோடு அதனுடைய ஒரு வடிவமாகத்தான் இஸ்ரேலையும் இலங்கையையும் அவதானிக்க வேண்டும்.

தமிழினப்படுகொலை நடந்து 15ஆவது ஆண்டில் பலஸ்தீனப் படுகொலை அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது. பலஸ்தீனப் படுகொலையை உன்னிப்பாக அவதானிப்பவர்களுக்குத் தமிழினப் படுகொலைக்கும், நடைபெற்றுக் கொண்டிருக்கும் பலஸ்தீனப் படுகொலைக்கும் இடையே நெருங்கிய ஒற்றுமைப் பண்புகள் இருப்பதை அவதானிக்கலாம்.

தமிழின – பலஸ்தீனப் படுகொலை அரசியல் வரலாற்று பின்னணியில் பல்லின மக்கள் குழுமங்கள் இனத்துவ சாயத்திற்கு உட்படுத்தப்பட்டு, இனமயப் படுத்தப்பட்ட வில்லைகளுக்கூடாகவே அவதானிப்பதற்கு பழக்கப்படுத்தப்பட்டனர். காலனித்துவத்தின் மிக மோசமான விளைவுகளில் இது முக்கியமானது.

போர்க்களமாக தெரிந்தெடுக்கப்பட்ட புவியியல் பிரதேசம் இரண்டிலுமே கடலை அண்டிய பிரதேசமாகவே இருக்கின்றது. உணவு ஆயுதமாக்கப்பட்டது. இரு இனப் படுகொலைகளிலுமே இலங்கை அரசும், இஸ்ரேல் அரசும் ஏறக்குறைய ஒரே விதமான ஆயுதங்களையும், உத்திகளையும் பயன்படுத்தியது.

மருத்துவமனைகளை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்பட்டது. மருத்துவமனைகள் செயலிழந்து

காயப்பட்டவர்கள் சிகிச்சையின்றி இறந்துபோயினர். உணவுக்காக வரிசையில் காத்துநின்றவர்கள் குண்டுகளினால் கொல்லப்பட்டார்கள், அநாதை இல்லங்கள் குண்டுவீசி அழிக்கப்பட்டன, குழந்தைகள் ஈவிரக்கமின்றி கொல்லப்பட்டனர், மக்களுக்காக உலர் உணவு பாதுகாத்து வைக்கப்பட்ட இடங்கள் குண்டுகளுக்கு இரையாகின, தடைசெய்யப்பட்ட ஆயுதங்கள்

07▶

# தமிழரின் சுயாட்சி...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மக்களைக் கொல்வதற்குப் பயன்படுத்தப்பட்டன. இவ்வாறாகப் பட்டியல் நீண்டு கொண்டே போகின்றது.

ஆசியாவில் இலங்கை திருகோணமலைத் துறைமுகத்தின் கேந்திர முக்கியத்துவமும், மத்திய கிழக்கில் பலஸ்தீனத்தின் கேந்திர முக்கியத்துவமும், புவிசார் அரசியலில் கோலோச்சுவதற்குப் பேரரசுக்கு மிக அவசியமானது. பேரரசைக் கட்டமைப்பதற்கு, அதன் நலன் சார்ந்த எந்த விலையையும் கொடுப்பதற்கு பேரரசு தயாராக இருப்பதை இவை கோடிட்டுக் காட்டுகின்றன.

பேரரசும் அதன் வலையமைப்பும் உற்பத்தி செய்கின்ற இராணுவத் தளபாடங்களுக்கும், பேரரசின் பொருளாதார இருப்பிற்கும், தொடர்ந்து உருவாக்கப்பட்டுக்கொண்டிருக்கும் போர்க்களங்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருப்பதை யாரும் மறுக்க முடியாது.

ஏக பேரரசைக் கட்ட முயலும் நாடுகள் தான் மனித உரிமையையும், பொறுப்புக் கூறலையும் போதிக்கின்றன என்பது அபத்தம். இவை இரண்டுமே ஒவ்வாத் தன்மை கொண்டவை. இது பலஸ்தீனப் படுகொலையில் மிகத்தெளிவாகவே உறுதி செய்யப்பட்டுள்ளது. 2002 பேச்சு முறிவடைவதற்கு அமெரிக்கா காரணமாக இருந்தது என்பது ஏற்கனவே ஆய்வுகள் மூலம் வெளிவந்த உண்மையாகும். அதுவே இன்று காசாவில் போர் நிறுத்தத்திற்கு எதிராக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்துகின்றது.

ஐ.நா. சபையும் அதன் ஏனைய அலகுகளும், சர்வதேச சமூகமும் அதன் கட்டமைப்பும் எவ்வாறு முள்ளிவாய்க்காலில் மிகப்பெரிய மனித பேரவலத்தை தடுக்க முடியாமல் போனதோ அதேபோல் இன்று அவர்களால் பலஸ்தீனப் படுகொலையையும் தடுக்க முடியாமல் போனது எமக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை.



இவை அனைத்துமே மக்கள் சக்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்ப அழைப்பை விடுக்கின்றன. விடுதலை சார் நம்பிக்கையை அடக்குமுறைக்குட்பட்ட மக்களுக்கு புறம்பே கட்டமைக்க முடியாது. ஏனெனில் விடுதலையின் செயலிகளாக அடக்குமுறைக்குட்பட்டவர்களும், பாதிக்கப்பட்டவர்களுமே இருக்கின்றார்கள். விடுதலை நம்பிக்கையை மக்களிடமிருந்து அகற்றும் போர் உத்தி, தமிழ்த் தேசியத்தின் மீதான நம்பிக்கையை சிதைக்கின்ற முயற்சியாகும்.



ஈழத் தமிழினத்தின் மீதான கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தி, புதுப்புது வடிவங்களை எடுத்துள்ளன. அது ஈழத் தமிழினத்தின் தன்னிறைவுப் பொருளாதாரத்தின் மீது, பண்பாட்டின் மீது, கல்வியின் மீது, ஈழத்தமிழினத்தின் மரபுகள் மீது, சைவத் தலங்கள் மீது, தொல்லியல் வரலாறு மீது, ஈழத்தமிழினத்தின் வரலாறு மீதானதாக விருக்கலாம். ஈழத்தமிழினத்தின் மீது திணிக்கப்பட்டுள்ள உளவியல் போரும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையின் வடிவமாகவே கருத வேண்டியுள்ளது.

உளவியல் போரின் நோக்கமாக ஈழத்தமிழினம் தமிழ்த் தேசியத்தின் மீது கொண்டிருக்கின்ற நம்பிக்கையைச் சிதைத்தலாகும். தமிழ்த் தேசியத்தின் நம்பிக்கை விழுமியங்கள்தான் ஈழத்தமிழினத்தின் கூட்டுப் பிரக்ஞையை விழிநிலையில் வைத்துக்கொண்டுள்ளது.

தமிழ்த் தேச நிலத்தின் மீதான போரின் பரிமாணங்களின் வடிவங்கள் எல்லாரும் அறிந்ததே நில ஆக்கிரமிப்பு படைக்கட்டுமானத்தினூடாகவும், தொல்லியல், வனசீவராசிகள் பணிமனைஊடாகவும், மகாவலி உட்பட ஏனைய அபிவிருத்தி திட்டங்கள் ஊடாகவும், சிங்கள - பௌத்தமயமாக்கலூடாகவும் தொடர்ந்த வண்ண முள்ளதோடு இவை தமிழ்த் தேசக் கோரிக்கையைச் சிதைப்பதற்கான முயற்சியாகும்.

இந்தக் கோரிக்கையைச்

07▶

# அனைத்து இலங்கையர்களுடனும் அமெரிக்கா துணை நிற்பதாக தூதுவர் ஜூ லி சங் தெரிவிப்பு





இலங்கையின் உள்நாட்டுப் போர் முடிவடைந்து 15 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், ஒன்றிணைந்த எதிர்காலத்திற்கான மீளெழுச்சி மற்றும் நம்பிக்கையை பிரதி பலிக்கும் வகையில், அனைத்து இலங்கையர்களுடனும் அமெரிக்கா துணை நிற்பதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், தனது உத்தியோகபூர்வ எக்ஸ் வலைத்தள பக்கத்தில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

நீதி, சம உரிமைகள் மற்றும் வாய்ப்புகளுக்கான அணுகல் ஆகியவற்றைத் தொடர்ச்சியாக எதிர்பார்க்கும் தரப்பி னர் உள்ளிட்ட இலங்கை மக்களுடன் தாம் உறுதியான பங்காளியாக இருக்கிறார் என அவர் சுட்டிக்காட்டியுள் ளார்.

நிலையான சமாதானம் மற்றும் முன்னேற்றத்திற்கான பன்முகத்தன்மையை உள்ளடக்கிய, வளமான எதிர்காலத்தை நோக்கிய இலங்கையின் பயணத்திற்கு ஆதரவளிப்பதற்கான தமது அர்ப்பணிப்பை தாம் மீண்டும் உறுதிப்படுத்துகிறார் என ஜூலி சங் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தோனேஷியாவுக்குப் பயணம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தோனேஷியாவிற்குப் பயணமாகியுள்ளார்.

இந்தோனேஷியாவின் பாலி நகரில் இடம்பெறவுள்ள உலக நீர் மாநாட்டின் உயர்மட்ட கூட்டத்தில் பங்கேற்பதற்காக அவர் இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோ விடோடோவின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி இந்த உத்தியோகபூர்வ பயணத்தை மேற் கொண்டுள்ளார்.

இந்த மாநாடு இன்று முதல் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

நாளை 20 ஆம் திகதி இடம்பெறவுள்ள மாநாட்டின் உயர்மட்ட கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட உரையாற் றவுள்ளார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதனிடையே, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்க குமாரதுங்கவும் உலக நீர் மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்தோனேஷியாவிற்குப் பயணமாகியுள்ளார்.



## தமிழரின் சுயாட்சி...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சவாலுக்குட்படுத்துவதினூடு ஈழத்தமி ழினத்தின் இருப்பைக் கேள்விக்குட் படுத்தல் மிக இலகுவாக முன்னெடுக் கப்படுகிறது.

ஈழத்தமிழினத்தின் அக முரண்பாடு களான சாதியம், ஆணாதிக்கம், மத அடிப் படைவாத கூறுகளைத் தூண்டி விடு கின்ற போக்கு மிக அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது. தமிழ்த் தேசியம் ஒரு முற்போக்கான கருத்தியல். அது ஏற்க னவே இந்த அக முரண்பாடுகளை அலசி ஆராய்ந்து அதற்கான தீர்வை நோக்கிப் பயணிக்கின்றது.

ஈழத்தமிழினத்தின் இளைய தலை முறையை கூட்டு விடுதலை விழி நிலையி லிருந்து திசைதிருப்புவதற்காக போதைப் பொருள் வடக்கு – கிழக்கில் தாராளமா கப் பாவனைக்கு விடப்பட்டுள்ளது. சினி மாப் பாணியில் வெவ்வேறு குழுக்களை உருவாக்கி, உட்பூசலைத் தக்கவைத் துக்கொண்டிருக்கின்றது. கேளிக்கை நிகழ்வுகளை ஒழுங்கமைத்து கதா நாயக மைய வாழ்வியல் செல்நெறியை உருவாக்கின்றது. கதாநாயக மைய வாழ்வியல் நீரோட்டம் சுய திறனாய்வுச் சிந்தனையைச் சிதைக்கின்றது.

பாசமிகு ஈழத்தமிழ் உறவுகளே, முன்னெப்பொழுதுமில்லாதவாறு ஈழத்தமிழினம் தனது இருப்பின் மீதான அச்சுறுத்தலை எதிர்கொள்வதோடு ஈழத்தமிழினத்தின் இருப்பை சவாலுக்குட் படுத்தும் அலகுகளை எதிர்த்து போராட வேண்டிய வரலாற்றுக் கட்டாயத்திற்குள் ஈழத்தமிழினம் வலிந்து நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளது.

இந்த வரலாற்றுக் கடமை ஒட்டுமொத்த ஈழத்தமிழினத்திற்கானதே யாரும் இப் பாரிய பொறுப்பிலிருந்து விலகிச் செல்ல முடியாத வரலாற்றுத் தேவைக்குள் நாம் இருக்கின்றோம்.

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் குறி யீடு மட்டுமல்ல, அடக்குமுறை எதிர்ப்பின் குறியீடும் கூட. முள்ளிவாய்க்கால் தமிழி னப் படுகொலை நினைவு நாளில் கொத் துக்கொத்தாக கொல்லப்பட்ட உறவு களை நினைக்கையில் அவர்கள் சுமந்து வந்த கனவுகளையும், இலக்குகளையும் நினைத்து, குருதி உறைந்து சிவந்து போன மண்ணிலிருந்து சபதம் எடுக்கின் றோம். எத்தடைவரினும் எமது இலக்கை அடைவோம் என்று எம் உறவுகளின் கல்லறைகள் மீது உறுதி எடுக்கின்றோம்.

தமிழினப் படுகொலையின் 15ஆவது நினைவேந்தல் நாளில் பின்வருவன வற்றை மீளவும் வலியுறுத்துகின்றோம்.

+ நினைவுகூரல் கூட்டுரிமை சார்ந்தது மட்டுமல்ல பண்பாட்டு உரிமையும் கூட. ஆகவே, இலங்கை அரசு தமிழினப் படுகொலை நினைவுகூரலைத் தடுக்க முடியாது.

+ ஈழத்தமிழினம் தமிழினப் படு கொலைக்கான நீதியை சர்வதேச விசாரணைக்கூடாகவே கோரி வருகின் றது. அந்தக் கோரிக்கையை மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

+ ஈழத்தமிழினம் ஒரு தனித்துவமான தேசத்திற்குரிய அலகுகளைத் தன்ன கத்தே கொண்ட இனம்.

+ கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக் கூடாக தமிழின இருப்பு கேள்விக்குட்படுத் தப்படுகின்றது. இதுவும் இனவழிப்புப் போரின் ஓர் அங்கமென நாம் கருதுகின் றோம்.

+ தமிழர்கள் ஒரு தேச அங்கீகாரத்– துக்குரியவர்கள் என்பதோடு அவர்களின் தனித்துவமான இறையாண்மையின் அடிப்படையிலும், ஒருபோதும் பராதீனப் படுத்தவியலாத சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலும் அவர்களின் சுயாட்சியை அங்கீகரிக்க வேண்டும்.

எம் பாசமிகு உறவுகளே, தமிழ்த் தேசிய விடுதலை தரும் நம்பிக்கையுடன் தொடர்ந்தும் பயணிக்க முள்ளிவாய்க்கால் பொதுக்கட்டமைப்பு அழைப்பு விடுக்கின் றது.” – என்றுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## சர்வதேசத்தின் தோல்வி

நேற்றுடன் யுத்தம் முடிந்து 15 ஆண்டுகளாகி விட்டன. யுத்தத்தில் பேரிழப்புகளைச் சந்தித்த தமிழினம் தனது பேரவலங்களுக்கு கூட நீதி கிட்டாமல் ஏமாந்து நடுவீதியில் நிற்கின்றது.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை இன்றைய அவர்களின் நிர்கதி நிலைக்கு - கையறு கட்டத்துக்கு - ஏமாற்ற அவலத்துக்கு - பௌத்த, சிங்களப் பேரினவாத அரசுகள் மட்டும் காரணம் அல்ல. இலங்கை அரசை நம்பி, போர் தொடர்பில் அதன் தவறான அணுகுமுறைக்கு அமைதி காத்தமை மூலம் அங்கீகாரம் அளித்த சர்வதேசமும் கூட முழுப் பொறுப்புத்தான்.

இது, இப்போது, சர்வதேச சமூகத்திற்கு நேரடியாக எடுத்துரைக்கப்பட்டு வருகின்றது.

இறுதி யுத்தத்தின் பேரவல மையமான முள்ளிவாய்க்காலில் நேற்று நடைபெற்ற நினைவேந்தலின் போது அதில் பங்கு கொண்ட சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் அக்னஸ் கால்மார்ட் அம்மையார் அங்கு வைத்து இந்தக் குற்றச்சாட்டை - சர்வதேசத்தின் தவறை - அம்பலப்படுத்தி கருத்து வெளியிட்டிருக்கின்றமை முக்கியமானதாகும்.

இலங்கை அதிகாரத் தரப்புகளினதும், சர்வதேச சமூகத்தினதும் இணைந்த கவலையீனமான செயற்பாட்டின் விளைவே இன்றைய மோசநிலைக்குக் காரணம் என்பதை அவர் அப்பட்டமாக வெளிப்படுத்தியிருக்கின்றார்.

பாதிக்கப்பட்ட தமிழர் தரப்புகளில் இருந்தும் சர்வதேசத்தின் மீதான இந்தக் குற்றச்சாட்டு விரல்கள் நீளுகின்றன. அதில் தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி. சர்வதேசத்தை சுட்டிக் கூறுகின்ற விடயம் கவனிக்கப்பட வேண்டும்.

“தமிழர்களுக்கு நீதி செய்யும் விடயத்தில் சர்வதேச சமூகம் முழுத் தோல்வி அடைந்து விட்டது. இறுதிக்கட்ட யுத்தத்தை இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது நடத்துவதற்கு சர்வதேச சமூகம் அனுமதி - அங்கீகாரம் - தந்து வெறுமனே பார்த்திருந்தது. அதைப் பயன்படுத்தித்தான் இலங்கை யுத்த வெற்றியை ஈட்டியது. இறுதிக்கட்டத்தில் வன்னியில் இருந்த ஐ.நா. அலுவலகங்கள் திடீரென இழுத்து மூடப்பட்டன. அதன் மூலம் சாட்சியங்கள் இல்லாமல் யுத்தத்தை இலங்கைப் படைகள் நடத்தி முடிப்பதற்கான முழு வாய்ப்பும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.” - என்று மனோ கணேசன் சுட்டுகின்றார்.

“யுத்தப் பேரவலத்தைச் சந்தித்த தமிழர்களுக்கு இந்தப் பதினைந்து வருடங்களின் பின்னர் என்ன கிடைத்தது? அரசியல் தீர்வும் இல்லை. யுத்த பாதிப்புக்களுக்கு நீதியும் கிட்டவில்லை. பொறுப்பு கூறலும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. குறைந்தபட்சம் உயிரிழந்த தமது உறவுகளை தத்தமது இடங்களில் நினைவேந்தி தம்மை ஆற்றுப்படுத்தும் உரிமையைக் கூட சர்வதேசம் அவர்களுக்குப் பெற்றுத் தரவில்லை. சாட்சியங்கள், சான்றாதாரங்கள் இன்றி, கொடூரப் போரை இலங்கைப் படைகள் முன்னெடுத்து வெற்றிகரமாக நடத்தி முடிப்பதற்கு ஒத்துழைத்த சர்வதேசம், இன்று தமிழ் மக்களை நட்டாற்றில் விட்டு விட்டு வாளாவிருக்கின்றது” - என மனோ கணேசன் கூறுகின்ற விவகாரம்தான் இப்போதைய உண்மை நிலைமை.

நினைவேந்துவதற்கான உரிமை நேற்றைய தினமும் கூட பொலிஸ் தரப்பினால் மறுக்கப்பட்டிருக்கின்றது. உயிரிழந்த தங்கள் உறவுகளை அஞ்சலிப்பதற்காக ஒரு விளக்கேற்றுவதற்கு கூட தமிழர்கள் நடுநடுங்கி, அச்சத்துடன்தான் அதைச் செய்ய வேண்டும் என்ற ஆபத்தான கட்டம்.

நாட்டுக்கு ஜனாதிபதி இருக்கின்றார். பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் இருக்கின்றார். பொலிஸ் துறைக்கே பொறுப்பான பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் இருக்கின்றார். ஏன், பொலிஸ் திணைக்களம் என்ற ஒரு பெரிய கட்டமைப்பே அரசின் கையில் இருக்கின்றது. ஆனால் எந்தத் தரப்பும் தமிழ் மக்கள் தங்கள் உறவுகளை நினைவேந்துவதற்கான உரித்து குறித்து தெளிவான அறிவிப்பையோ, வழிகாட்டலையோ, கொள்கை விளக்க நிலைப்பாட்டையோ வெளிப்படுத்தினர் அல்லர்.

மாறாக, காதும் காதும் வைத்தால் போல - ஒளிவு மறைவாக - முதுகெலும்பில்லாத நீதிமன்றங்களிடம் போய் அஞ்சலி நிகழ்வுக்கும் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறுதலுக்கும் தடை உத்தரவு வாங்கி வந்து குசும்பு பண்ண பண்ணும் வேலை தொடர்கின்றது.

இது, நாடா? அல்லது சீரழிந்த கேடா?

## தமிழகத்தில் கனமழை:

# தேனி, நெல்லை, தென்காசியில் 2 தினங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை



தமிழகத்தின் தேனி, தென்காசி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் இன்றும், நாளையும் கனமழை சிகப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில்,

"தென்தமிழக உள் மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 கிலோ மீற்றர் முதல் 50 கிலோமீட்டர் வரை) லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், ஈரோடு, சேலம், நாமக்கல், கரூர், திருச்சிராப்பள்ளி, தர்மபுரி, கிருஷ்ணகிரி, தூத்துக்குடி இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை, புதுக்கோட்டை, மதுரை, தேனி, திண்டுக்கல், திருப்பூர், கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலைப்பகுதிகள் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது." - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# தம்பி விஜய்யுடன் கைகோக்க தயார்

## சீமான் அறிவிப்பு



எதிர்வரும் 2026 சட்டப்பேரவை தேர்தலில் த.வெ.க. தலைவர் விஜய்யுடன் வாய்ப்பு அமைந்தால் ஒன்று சேர நான் காத்திருக்கின்றேன்.த.வெ..க சார்பில் நடைபெறும் மாநாட்டுக்கு அழைப்பு வந்தால் செல்வேன்."

-இவ்வாறு நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து நேற்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய சீமான்,

"கோயில், சாமி, சாதி, மதம் ஆகியவற்றை மட்டுமே பேசிக்கொண்டு இன்னும் எத்தனை காலத்துக்கு ஜெயிக்க முடியும். பா.ஜ.கவால் கடந்த 10 ஆண்டுகால ஆட்சியில் செய்த ஒரு சாதனையைக் கூட சொல்லி மக்களிடம் ஓட்டு கேட்க முடியவில்லை. அதற்கு பதிலாக காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் கோயிலை இடித்துவிடுவார்கள், முஸ்லிம்களுக்கு அனைத்தையும் வாரி வழங்கிவிடுவார்கள் என பிரதமர் தனது பிரச்சாரத்தில் பேசிக் கொண்டிருக்கிறார். இது ஒரு தலைவருக்கு அழகல்ல.

இதைப்பற்றி மட்டுமே சிந்திப்பவர்கள் மக்களைப் பற்றி சிந்திக்க மாட்டார்கள். பிரதமர் மோடி ஆட்சிக்கு வந்தால் கேஜ்ரிவால் கூறியதை போல முதல்வர்கள் ஸ்டாலின், மம்தா, பினராயி விஜயன் போன்றோரின் கைது உறுதியாக நடக்கும். சமூகத்தில் எதைப் பற்றியும் யோசிக்காமல் எதை வேண்டுமானாலும் பேசிவிட்டு சென்றுவிடுகின்றனர்.

தமிழக காவல்துறை ஏ.டி.ஜி.பி. அருணுக்கு 2 பெண் பிள்ளைகள் உள்ளனர். தன் தந்தையைப் பற்றி தவறாக பேசுவதை அவர்கள் எப்படி எதிர்கொள்வார்கள்? எனவே யூடியூபர் சவுக்கு சங்கர் பேசியது தவறு.

தமிழக வெற்றிக் கழகம் சார்பில் நடக்கும் மாநாட்டுக்கு அழைப்பு வந்தால் நிச்சயம் செல்வேன். 2026 இல் விஜய்யுடன் ஒன்று சேர வாய்ப்பு அமையுமானால் அதற்காக காத்திருக்கிறேன். அண்ணனும், தம்பியும் சந்திப்பது வழக்கம். அப்படித்தான் நானும் விஜய்யும் சந்தித்துக் கொள்கிறோம்.

மறைந்த தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் பதம்பூஷண் விருதுபெற தகுதியான நபர். ஒரு கட்சியின் தலைவர் அல்லது நடிகராக மட்டுமின்றி அவர் ஒரு நல்ல மனிதர். எனவே விஜயகாந்த் உயிருடன் இருக்கும்போதே பதம்பூஷண் விருது வழங்கப்பட்டிருக்க வேண்டும். இப்போது கொடுத்தில் பயனில்லை." - என்றார்.





# புதிய ப்ளூ ரெசிடென்சி விசாவினை அறிமுகப்படுத்திய ஐக்கிய அரபு அமீரகம்

ஐக்கிய அரபு அமீரகம் புதிதாக 10 வருட விசேட ப்ளூ ரெசிடென்சி விசாவை அறிமுகப்படுத்தியுள்ளதாக அந் நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சுற்றுச்சூழலைப் பாதுகாக்க அயராது உழைத்தவர்களுக்கு பத்து வருட ப்ளூ ரெசிடென்சி விசாவை வழங்கப் போவதாக ஐக்கிய அரபு அமீரகம் அறிவித்துள்ளது.

இந்த விடயத்தினை டுபாய் பிரதமர் ஷேக் முகமது பின் ரஷீத், தனது எக்ஸ் வலைத்தளத்தில் தெரிவித்துள்ளார்.

அந்த பதிவில், "ஐக்கிய அரபு அமீரகத்தின் பொருளாதாரம் சுற்றுச்சூழல் சமநிலையுடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் இந்த விடயத்தில் எங்களின் போக்கு தெளிவாகவும், நிலையானதாகவும் உள்ளது.

கடல் விலங்கினங்கள், நிலப்பரப்பு சுற்றுச்சூழல் அமைப்புகள், காற்றின் தரம், நிலையான தொழில்நுட்பம் போன்ற துறைகளில் பணிபுரிந்தவர்களுக்கு இந்த விசாக்கள் வழங்கப்படுகின்றன.

தகுதியும் விருப்பமும் உள்ளவர்கள் அடையாளம், குடியுரிமை, சுங்கம் மற்றும் துறைமுக பாதுகாப்பு அதிகாரிகளிடம் விண்ணப்பிக்கலாம்." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிங்கப்பூரில் 25,900 பேருக்கு கொரோனா; முகக்கவசம் அணியுமாறு அறிவுறுத்தல்



சிங்கப்பூரில் தற்போது மீண்டும் கொரோனா பரவல் அதிகரித்து வருகிறது. கடந்த 5 ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரை கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து 25 ஆயிரத்து 900 ஆக உயர்ந்துள்ளதாக அந்நாட்டு சுகாதாரத் துறை தகவல் தெரிவித்துள்ளது.

நாளுக்கு நாள் பரவல் அதிகரித்து வருவதால், சிங்கப்பூர் மக்கள் அச்சமடைந்துள்ளர்.

சீனாவில் கடந்த 2019 ஆம் ஆண்டு கண்டறியப்பட்ட கொரோனா வைரஸ் தொற்று பின்னர் உலகம் முழுவதும் பரவியது. இதனால் உலக நாடுகள் பலவும் பெரும் பாதிப்பை சந்தித்தன. தற்போது பல நாடுகளில் இயல்பு நிலை திரும்பிய நிலையில் சிங்கப்பூரில் கொரோனா வைரஸ் பாதிப்பு அதிகரித்து வருகிறது. இது பற்றி சிங்கப்பூர் சுகாதார அமைச்சர் கூறுகையில்,

"நாட்டில் கொரோனா புதிய அலை வேகமெடுக்கத் தொடங்கியுள்ளது. தொற்று பாதிப்பு தொடர்ந்து அதிகரித்து வருவதைப் பார்க்க முடிகிறது. இந்த அலை அடுத்த 2 முதல் 4 வாரங்களில் ஜூன் இறுதியை ஒட்டி உச்சத்தைத் தொட வாய்ப்புள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது. இப்போது நாம் புதிய அலையின் தொடக்கத்தில் இருக்கிறோம்.

வரவிருக்கும் விஷயங்களுக்கு சுகாதார அமைப்பு நம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நான் நினைக்கிறேன். கொரோனா பாதிப்புகளை கருத்தில் கொண்டு பொதுமக்கள் முகமூடியை அணிய வேண்டும்." – என்றார்.

# இரண்டு மாதங்களுக்குள் மின் கட்டணங்களை குறைக்க முடியும் என்கின்றார் பிரதமர் தினேஷ்

அடுத்த இரண்டு மாதங்களுக்குள் மின் கட்டணங்களை குறைக்க முடியும் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொலன்னாவை பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

உமா ஓயா மின்னுற்பத்தி திட்டத்தினூடாக தேசிய மின் கட்டமைப்பிற்கு 120 மெகாவாட் மேலதிக மின்சாரம் கிடைக்கின்றமை கட்டணக் குறைப்பு விடயத்தில் நேரடி தாக்கம் செலுத்துவதாக பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கமைய, மின் கட்டணத்தைக் குறைப்பது தொடர்பில்



கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பிரதமர் தெரிவித்துள்ளார்.

# நேருக்கு நேர் மோதிய பஸ்கள் விபத்தில் 26 பேருக்குக் காயம்

## இருவரின் நிலைமை கவலைக்கிடம்





கேகாலை – அவிசாவளை வீதியில் கொட்டபொல பிரதேசத்தில் நேற்று மாலை 4 மணியளவில் இரண்டு பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கண்டியிலிருந்து அவிசாவளை நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்று அதிக வேகத்துடன் பயணித்தமையாலும் கவனக்குறைவாக மற்றுமொரு வாகனத்தை முந்தி முன்னோக்கிச் செல்ல முயன்றமையாலும் இந்த விபத்து இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

விபத்தின் போது 26 பேர் காயமடைந்துள்ள நிலையில் கேகாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களில் பஸ் சாரதியொருவரின் நிலைமையும் பெண் ஒருவரின் நிலைமையும் கவலைக்கிடமாக உள்ளன என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தினரிடம் கடவுச்சீட்டை ஒப்படைத்தார் டயானா கமகே

முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தனது கடவுச்சீட்டை குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளார்.

நீதிமன்ற உத்தரவிற்கு அமைய அவர் தனது கடவுச்சீட்டை ஒப்படைத்துள்ளார்.

டயானா கமகேவின் நாடாளுமன்ற உறுப்புரிமையை இரத்து செய்து உயர் நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டது.

டயானா கமகே இலங்கைப் பிரஜை இல்லையென்பதால், அவர் தொடர்ந்தும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்க முடியாதென உயர் நீதிமன்றம் தீர்ப்பில் குறிப்பிட்டிருந்தது.

இதற்கமைய, அவர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகிப்பதை தடுத்து நீதிமன்றத்தினால் எழுத்தாணைக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

இதனிடையே, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டயானா கமகே வெளிநாடு செல்ல தடை விதித்து கொழும்பு பிரதம நீதவான் திலின கமகேவினால் கடந்த 9 ஆம் திகதி தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.



இதற்கமைய, அவர் தனது கடவுச்சீட்டை குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளார்.




# லண்டனில் நினைவேந்தல் போராட்டம்

முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று சனிக்கிழமை லண்டனில் புலம்பெயர் தமிழ் உறவுகளால் நினைவேந்தல் போராட்டம் நடத்தப்பட்டது.

பிரிட்டிஷ் பிரதமரின் டவுனிங் வீதி இல்லத்துக்கு அருகில் நடத்தப்பட்ட இந்தப் போராட்டத்தில் பெரும் எண்ணிக்கையான புலம்பெயர் த்ச்மிழர்கள் பங்கு கொண்டனர்.








# விக்கியின் இல்லத்தில் நினைவேந்தல்

தமிழ் மக்கள் கூட்டணிக் கட்சியைச் சேர்ந்தவர்கள் நேற்று நண்பகல் 12 மணியளவில் யாழ்ப்பாணம், நல்லூர், கோயில் வீதியில் உள்ள கட்சியின் செயலாளர் நாயகம் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனின் இல்லத்தில் ஒன்று கூடி முள்ளிவாய்க்காலில் மரணித்த தமது உறவுகளுக்கு தீபமேற்றி நினை வேந்தி அஞ்சலி செலுத்தினர்.





# பொது வேட்பாளர் முன்னெடுப்புக்கு தமிழரசு இன்று முடிவுரை எழுதுமா?



புருஜோத்தமன் தங்கமயில்

தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் முன்னிறுத்துவது என்பது முட்டாள்தனமான பைத்தியக்காரத் திட்டம் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்திருக்கிறார். தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் வவுனியாவில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கின்ற நிலையில், பொது வேட்பாளர் தொடர்பிலான சம்பந்தனின் நிலைப்பாடு வெளியாகியிருக்கின்றது. "…ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது தமிழினத்துக்கு பேராபத்தானதாக அமையும். ஆகவே, அந்த முன்னெடுப்புக்களுக்கு தமிழரசுக் கட்சி இணங்கக் கூடாது. உறுதியாக எதிர்த்து நிற்க வேண்டும்." என்று தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவிடம் சம்பந்தன் வலியுறுத்தியிருக்கிறார். இந்தச் செய்தியை மத்திய குழுக் கூட்டத்திற்கு எடுத்துச் செல்லுமாறும் அவர், மாவையிடம் கூறியிருக்கிறார்.

பொது வேட்பாளர் விடயம், அடுத்த கட்டத்திற்கு நகர்வதில் தமிழரசுக் கட்சியின் தீர்மானம் முக்கியமானதாக அமையும். ஏனெனில், பொது வேட்பாளர் விடயத்தில் ஒரு சில தனிநபர்களைத் தாண்டி, அதில் அவ்வளவு உறுதிப்பாட்டோடு எந்தத் தரப்பும் இல்லை. குறிப்பாக, பொது வேட்பாளர் விடயத்தை முதன் முதலில் அரங்கிற்கு கொண்டு வந்த ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் உள்ள கட்சிகள், தற்போது அதிலிருந்து பின்வாங்கத் தொடங்கிவிட்டன. குறிப்பாக ரெலோ, புளொட் என்பன தமிழரசுக் கட்சியின் தீர்மானத்தை அறிந்து கொண்டு முடிவெடுக்கும் நிலையில் இருக்கின்றன. பொது வேட்பாளர் விடயத்தை தமிழரசுக் கட்சி ஒதுக்கிவிட்டால், அதனைக் காட்டிக் கொண்டு ரெலோவும் புளொட்டும் விலகிவிடும். அப்படியான கட்டத்தில், அரசியல் ஆய்வாளர்கள் என்று தங்களை முன்னிறுத்தும் ஒரு சிலரும், ஊடக முதலாளி ஒருவரும்தான் பொது வேட்பாளர் விடயத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் சாத்தியம் உண்டு.

தமிழ்ப் போது வேட்பாளர் விடயத்தில் தமிழரசுக் கட்சிக்குள் சிவஞானம் சிறீதரன், ஞா.சிறீநேசன், பா. அரியநேத்திரன் உள்ளிட்ட சிலர் ஆதரவு நிலைப் பாட்டில் இருக்கிறார்கள். அவர்கள், பொது வேட்பாளர் விடயம் காலத்துக்கு அவசியமான ஓர் அரசியல் நகர்வு என்று எழுதியும் பேசியும் வருகிறார்கள். அத்தோடு, தங்களின் நிலைப்பாட்டுக்கு கட்சியின் மத்திய செயற்குழு அங்கீகாரம் அளிக்கும் என்றும் நம்பு கிறார்கள். அதனால்தான், யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற பொது வேட்பாளர் ஆதரவுக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த சிலர், "…மத்திய குழுவில் எங்களுக்குத்தான் பெரும்பான்மை இருக்கின்றது. ஆகவே, பொது வேட்பாளர் விடயத்தை கட்சி அனுமதிக்கும்.." என்ற தோரணையில் பேசியிருக்கிறார்கள். ஆனால், இன்றைய மத்திய குழுக் கூட்டத்தில், பொது வேட்பாளர் விடயத்துக்கு ஆதரவான கருத்துக்களை முன்வைத்து யார் வாதிடப்போகிறார்கள் என்ற கேள்வி எழுகின்றது. ஏனெனில், பொது வேட்பாளர் விடயத்துக்கு எதிரான கருத்தை சம்பந்தன் தீர்க்கமான முன்வைத்திருக்கிறார். அத்தோடு, 'உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் இணைந்த வடக்குக் கிழக்கில் சமஷ்டி முறையிலான அதிகாரப்பகிர்வுடனான தீர்வு' என்பது தமிழ் மக்களுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் ஒஸ்லோவில் காணப்பட்ட சர்வதேச இணக்கப்பாடு. அதனைத் தாண்டிய எந்த இணக்கப்பாடும் சர்வதேச நாடுகளின் அங்கீகாரத்தோடு தமிழ் மக்களுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் அதன்பின்னர் இடம்பெறவில்லை. அப்படியான நிலையில், அதனை சிதைக்கும் முயற்சிகளில் தமிழரசுக் கட்சி இணை

தொடர்ச்சி▼




# பொது வேட்பாளர் முன்னெடுப்புக்கு தமிழரசு இன்று முடிவுரை எழுதுமா?

தொடர்ச்சி▲

யக்கூடாது என்பதுவும் சம்பந்தன் வாதம். இதற்கு எதிராக எப்படியான கருத்துக்களை பொது வேட்பாளர் ஆதரவுத் தரப்பினர் எடுத்து வைக்கப்போகிறார்கள்? அத்தோடு, பொது வேட்பாளர் தொடர்பில் காணப்படும் சந்தேகங்களை மத்திய குழு உறுப்பினர்கள் எப்படியும் எழுப்புவார்கள். அவற்றுக்கு யார் பதிலளிப்பது?

### குரு சிஷ்ய கூடாரம்

தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில் எதிர்க்கருத் துக்களை வெளியிடுவோரும், சந்தேகங்களை எழுப்புவோரும் 'அரசியல் அறிவற்றவர்கள்' என்ற வகையிலான பத்திகளை, அரசியல் ஆய்வாளர்கள் என்று தங்களை முன்னிறுத்தும் சிலர் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, "...நாங்கள் நீண்ட காலமாக எழுதி வருகிறோம். எங்களின் எழுத்துக்களை தாயகத்தில் உள்ளவர்கள் படிப்பதில்லை. புலம்பெயர் தேசத்தில் உள்ளவர்கள்தான் அதிகம் படிக்கிறார்கள். தாயகத்தில் உள்ளவர்களுக்கு வாசிப்புப் பழக்கமும் இல்லை. அரசியல் அறிவும் இல்லை..." என்ற ஒப்பாரி வைக்கப்படுகின்றது. யார் வேண்டுமானாலும் கருத்துச் சொல்லலாம் என்ற நிலை தாயகத்தில் ஏற்பட்டுவிட்டது என்றும் அரசியல் ஆய்வாளர் (எ) பத்தியாளர்கள் சிலர் கோபங்களை வெளிப்படுத்துகிறார்கள். குறிப்பாக, பொது வேட்பாளர் தொடர்பில் கேள்வி எழுப்புவோருக்கு எதிராக வன்மவாதிகள், அறிவிலிகள் என்ற தோரணையில் நிலாந்தன் எழுதுகிறார்.

இதுவொன்றும் ஆயுதப் போராட்ட காலம் அல்ல. தமிழினம் மிகமோசமான பின்னடைவுகளோடு இருந்தாலும் சமூக பொருளாதார ரீதியில் அதன் விழுமியங்களின் வழியான முன்னோக்கிய பயணத்தை மெல்ல மேற்கொண்டிருக்கின்றது. யார் விரும்பினாலும் இல்லையென்றாலும் ஜனநாயக அரசியல் (தேர்தல் அரசியல் என்று வைத்துக் கொண்டாலும் கூட) கருத்து மோதல்களினால் வலுப்பெறுவது. எதிர்க்கருத்துக்கள் இல்லையென்றால், ஜனநாயக அரசியல் செத்துவிடும். எதிர்க்கருத்துக்களுக்கு அச்சம் கொள்வோர், ஏதேச் சதிகார நிலைப்பாடுகளின் புள்ளியில் நிற்பவர்கள். அவர்களினால் சில சிறு குழுக்கள் அல்லது தனி நபர்கள் வேண்டுமானால் ஆதாயம் அடையலாம். மாறாக, எந்தவொரு மக்கள் கூட்டமும் நன்மை அடை யாது. ஏதேச்சதிகாரம் என்பது எப்போதுமே பேரழிவின் அடையாளம். எதிர்க்கருத்துக்களை ஏதிர்கொள்ளும் மனப்பக்குவம் இல்லாமல், எதிர்க்கருத்தாளர்களை நோக்கி வன்மவாதிகள், அறிவிலிகள் என்று அடையாளப்படுத்துவதற்கான துணிவு, எந்தவொரு ஜனநாயகவாதிக்கும் வராது.

இன்னொரு பக்கம், இந்த அரசியல் ஆய்வாளர்கள் (எ) பத்தியாளர்கள், குரு – சிஷ்ய மரபில் நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கிறார்கள். அரசியல் கருத்துக்களை பேசுவதற்கும் எழுதுவதற்கும் ஒரு தகுதி வேண்டும். அந்தத் தகுதி, குரு ஒருவரிடம் ஆசிபெற்றுவதன் ஊடாக வர வேண்டும். அப்படியான நெறிமுறைகளுக்கு அப்பால், நின்று கருத்து வெளியிடுவோர், அரசியல் பேசுவதற்கு தகுதியற்றவர்கள் என்ற எண்ணம் அவர்களிடத்தில் உண்டு. அத்தோடு, இந்த ஆய்வாளர்கள், இன்னமும் 2000 ஆம் ஆண்டுக்கு முன்னாலேயே இருக்கிறார்கள். இப்போது 2024, சமூக ஊடகங்களும் இலத்திரனியல் ஊடக வெளியும் வியாபித்திருக்கின்ற காலம். ஒவ்வொரு மணித்துளியும் ஊடக வெளி தன்னைப் புதுப்பித்துக் கொள்கின்றது. கடந்த காலங்களில் நீண்ட கட்டுரைகளை எழுதி கருத்துச் சொல்லிக் கொண்டிருந்த விடயங்களை, இன்றைக்கு சில வரிகளுக்குள்ளும் எழுதியும் பேசியும் செல்லக் கூடிய நிலை வந்துவிட்டது. நீட்டி முழக்கி, தங்களின் தனிப்பட்ட மேதாவிலாசங்களைக் காட்டு வதற்கான களத்தினை இப்போது யாரும் கொண்

தொடர்ச்சி▼

# பொது வேட்பாளர் முன்னெடுப்புக்கு தமிழரசு இன்று முடிவுரை எழுதுமா?

தொடர்ச்சி▲

டாடுவதில்லை. அதற்கு யாருக்கும் நேரமும் இல்லை. ஒவ்வொரு நொடியும் தங்களைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டிய போட்டி உலகு இது. அதனைஒ புரிந்து கொள்வதற்கு, குரு – சிஷ்ய மரபினருக்கு பிரச்சினை இருக்கலாம். அத்தோடு, இவர்களுக்கு தங்களை எல்லாரையும் விட உயர்ந்தவர்களாக சிந்திக்கின்ற ஒருவகை தன்முனைப்பு மனநிலையும் உண்டு. அதனால்தான், கருத்துச் சொல்வதற்கு தகுதி வேண்டும் என்ற விடயத்தைக் குறித்து அக்கறை கொள்கிறார்கள்.

குரு – சிஷ்ய மரபு, அரசியல் ஆய்வாளர்கள் முள்ளிவாய்க்கால் முடிவுகளுக்குப் பின்னராக கடந்த 15 ஆண்டுகளில் ஆற்றிய பணி என்ன என்று நோக்கினால் போதும், அவர்களின் அரசியல் ஆய்வு திறனைக் குறித்து அறிந்து கொள்ளலாம். 2010க்குப் பின்னரான அரசியலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக மாற்றுத் தரப்பாக யாரை முன்னிறுத்தலாம் என்பதுதான், அவர்களின் பிரதான அரசியலாக இருந்தது. 2015 வரையில், கூட்டமைப்புக்கு மாற்றாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை முன்னிறுத்திய வர்கள். அதன் பின்னராக சி.வி.விக்னேஸ்வரனை தமிழின மீட்பராக அறிவித்தார்கள். அவருக்காக தமிழ் மக்கள் பேரவையை உருவாக்கிக் கொடுத்தார்கள். விக்னேஸ்வரனுக்கு அரசியல் பத்திகள் மூலம் ஜனவசியம் பூசினார்கள். இறுதியில், விக்னேஸ்வரன் தனிக்கட்சி ஆரம்பித்து, உதிரி வாக்குகளினால் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனார். இதன்பின்னராக போக்கிடமின்றி இருந்த, ஆய்வாளர்களுக்கு இப்போது கிடைத்திருப்பது தமிழ்ப் பொது வேட்பாளர் என்கிற விடயம். அது தொடர்பிலும் மக்களை தெளிவு படுத்தும் ஆற்றல் இருக்கின்றதா என்றால், அதுவும் இல்லை. மாறாக, அரசியல் கட்சித் தலைவர்களை குற்றம் சொல்வதோடு கடந்துவிடுகிறார்கள். கடந்த காலத்தில், இந்த ஆய்வாளர்களை பெரும் அரசியல் அறிஞர்களாக கருதி கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சி. விக்னேஸ்வரன், சிவஞானம் சிறீதரன் உள்ளிட்டவர்கள் ஆலோசனை கேட்டு வந்திருக்கிறார்கள். இந்த அரசியல் தலைவர்கள் கடந்த காலங்களில் இழைத்த அரசியல் தவறுகளை, ஆலோசனை வழங்கிய தரப்பினர் எடுத்துக் கொள்ளாமல் தப்பித்தது ஏன்?

முள்ளிவாய்கால் முடிவுக்குப் பின்னரான அரசியலில் அரசியல் தலைவர்களின் தவறுகளை மாத்திரம் காட்டி குளிர்காய்ந்துவிட முடியாது. அவர்களின் முடிவுகளுக்குப் பின்னால் இருந்தவர்களையும் அடையாளம் காண வேண்டும். குறிப்பாக, நம்பிக்கையோடு மெல்ல விரிந்து வந்த தமிழ் சிவில் சமூக வெளியை, இந்த ஆய்வாளர்கள் கூட்டம் பல பல பெயர்களில் அமைப்புக்கள், பேரவைகள் என்று தொடங்கி சிதைத்தார்கள். இன்றைக்கு, தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் எந்தவொரு சிவில் அமைப்புத் தோன்றினாலும், ஆய்வு மையங்கள் தொடர்பில் சிந்தித்தாலும் அவை தொடர்பில் ஆரம்பத்திலேயே மக்கள் சந்தேகம் கொள்ளும் சூழலே இருக்கின்றது. இந்த முன்னெடுப்புக்களின் பின்னால் யார் இருக்கிறார்கள்? யாரை நாடாளுமன்றத்துக்கு அனுப்புவதற்காக இந்த அமைப்பு? எந்த தூதுவராலயத்தின் செயற்றிட்டத்தை முன்னெடுக்க இந்த ஆய்வு மையம்? என்பதெல்லாம் இயல்பாக எழும் சந்தேகங்கள். இந்தச் சூழலை, அரசியல்வாதிகள் உருவாக்கவில்லை. மாறாக, தங்களை அரசியல் ஆய்வாளர்களாகவும், புலமையாளர்களாகவும் முன்னிறுத்திய தரப்பினர் உருவாக்கியது. ஓர் அமைப்பை ஆரம்பிப்பது, பின்னர் அதனைக் கைவிட்டு இன்னொரு அமைப்பை ஆரம்பிப்பது என்பது தமிழ் சிவில் வெளியில் நிகழும் நாளாந்த நடவடிக்கை. இவற்றுக்கு இருப்பவர்கள் எல்லோரும் ஒரே தரப்பினர். அதிலும், குரு – சிஷ்ய மரபினர். இவர்கள், தங்களின் கடந்த கால அரசியல் – சமூக தவறுகளை ஒருபோதும் சுய விமர்சனம் செய்வதில்லை. மாறாக, எதிர்க்கருத்துக்களை வெளியிட்டதும் பதற்றமடைந்து, அடையாளப்படுத்தும் அரசியலுக்குள் செல்கிறார்கள்.

### பொது வேட்பாளருக்கான முடிவு

பொது வேட்பாளர் என்கிற விடயத்தை அரசியல் கட்சிகளிடம் திணித்து, இணங்கப் பண்ண வேண்டும் என்ற அரசியல் நிலைக்குப் பின்னால், தமிழ் சமூக கட்டமைப்புக்களின் சிதைவு வெளிப்படையாக தெரிகின்றது. தமிழ்த் தேசிய அரசியலின் தூண்களின் ஒன்றாக அரசியல் கட்சிகளும் இருக்கின்றன. ஆனால், அந்தக் கட்சிகளின் செயற்பாடுகள் கேள்விக்குரியதாக மாறும் போது, தமிழ்த் தேசியம் சிவில் கட்டமைப்புக்களினூடாக தன்னுடைய அரசியலை நகர்த்தியிருக்கின்றது. ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பமும் நிலைபெறுகையும்கூட அப்படித்தான் நிகழ்ந்தது. அது கிட்டத்தட்ட மூன்று தசாப்த காலம் அரசியல் கட்சிகளை அவ்வளவுக்கு தமிழ்த் தேசிய போராட்டத்துக்குள் அண்ட விடவில்லை. அப்படியான நிலையில், தமிழ் மக்களின் சமூகக் கட்டமைப்புக்களை சீர் செய்து, கட்சிகளைத் தாண்டிய நிலைபெறுகை தொடர்பிலான முயற்சிகளை ஆய்வாளர்களோ, புலமையாளர்களோ இதுவரை முன்னெடுக்கவில்லை. அவர்கள் எப்போதுமே எல்லா விடயங்களுக்கும் அரசியல் கட்சிகளையே பிடித்துத் தொங்குகிறார்கள். அந்த நிலை மாறாத வரையில், காலத்தைக் கடத்தும் காட்சிகள் ஒவ்வோரு கால கட்டத்திலும் மேல் எழுந்து கீழே விழும். தமிழ்ப் பொது வேட்பாளர் விடயமும் அப்படியான ஒன்றுதான்.

எந்தவொரு அதிர்வையும் உண்டுபண்ண முடியாத, சில தனிநபர்களின் சுயநல நிகழ்ச்சி நிரலுக்காக முன்னெடுக்கப்படும் தமிழ்ப் பொது வேட்பாளர் என்கிற விடயத்துக்காக தமிழ்த் தேசிய அரசியலும், அதுசார் ஊடக வெளியும் அதிக நேரத்தை செலவிடுகின்றன என்ற ஆதங்கம் இந்தப் பத்தியாளருக்கு உண்டு. தமிழ்த் தேசியப் பரப்பின் முதன்மைக் கட்சியாக இன்றும் இருக்கும் தமிழரசுக் கட்சி, பொது வேட்பாளர் தொடர்பில் தன்னுடைய இறுதி முடிவை, இன்றே அறிவித்து விடயத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். இல்லையென்றால், பேசுவதற்கு வேறு முக்கிய விடயங்கள் இல்லை என்பதுபோல, பொது வேட்பாளர், பொது வேட்பாளர் என்று தொடர்ந்தும் அரசியல் வெளியையும் ஊடக வெளியையும் நிரப்பி, பல முக்கிய விடயங்கள் புறந்தள்ளப்படும் சூழல் நீடிக்கும். அதற்கு முதலில் முடிவு கட்டி, தமிழ்த் தேசிய அரசியல் வெளியை முக்கியமான பிரச்சினைகளின் பக்கத்தில் திருப்பி விட வேண்டும்.



# சுமந்திரனின் திடீர் தேசியம் கரையேறுமா?

தேசியம் என்பது இனம், மொழி, பண்பாடு – நாகரிகம், வாழ்வியல் முறைமை, வரலாற்றுத் தொடர்ச்சியை மரபு வழியாகப் பின்பற்றும் நடைமுறை ஒழுங்கு, அதன் தொன்மம், மரபுரிமையைப் பேணிக் காக்கும் கூட்டுப்பொறுப்பு என பல நிலையியல் இருப்பு செயல்முறை வழித்தோன்றல்கள் யதார்த்த உணர்வுகளுடன் மேலிடை கொள்வதாகும். அதுவே இருப்பியல் நிலையியல் கோட்பாட்டை நிலைநிறுத்தும் மாறலி அற்ற மரபு நிலையாகும். இது அடிப்படைக் கோட்பாட்டுச் சித்தாந்த நகர்வியல் போக்காகும்.

இத்தேசக் கோட்பாட்டை கட்டமைப்பதற்கு மொழி, பண்பாட்டியல் ஒழுங்கு முறைமை, ஒருங்கிணைந்த வரையறுக்கப்பட்ட நிர்ணய எல்லை, நிர்வாக முறைமை, உணர்வியல் கோட்பாடு, மரபுசார் பொருளாதாரம், உற்பத்தியாக்கம், தன்னாட்சி முறைமை, சுயநிர்ணய இருப்பிற்கான சுயமரியாதைக்கோட்பாடு என நின்று நிலைக்கக்கூடிய, வலுக்குன்றா, நிர்ணய நிலையை வலுவேறாக்கல் கடந்து, எக் காலமும் நிலைபேண்தகு உறுதித் தன்மையை உருக்குலையாமல் வலுக்குன்றாமல் கட்டமைப்பை நிலைதகு ஒழுங்கில் வலிமையோடு வல்லாளுமை இருப்புடையதாக்கி, தொலைநோக்கு சித்தாந்தத்துவத்தை ஒருமுகப்படுத்தி, வல்லாண்மையின் நிலையை நிறையாண்மைக்குட்படுத்துவதே தேசத்து தேசியம். இதில் சற்று வலிமையாக, எமது மண்ணில் எம்மை நாமே ஆளும் நிலையை தோற்றுவித்து, தாயகத்து உணர்வில் தமிழ்த்தேசியத்தை புகுத்தி, தன்னாட்சியை நிறுவி சுயநிர்ணய உரிமையை நமக்காக நாமே உருவாக்கிக் கொள்ளும் வலிமையான இரு கருத்து நிலையற்ற செயற்பாட்டுமையவாதம் கொண்ட சமத்துவ சமநீதிக்குட்பட்ட வாழ்வியல் உணர்வை கட்டமைப்பதே தமிழ் தேசிய அடிப்படை மரபியல்பு நிலைப்பாடாகும். இதையே புலிகளும் பின்பற்றினார்கள். இதில் சில தேசிய பல்வகைமை மாறுபட்ட நிலைகளும் உண்டு.

ஆகவே, தமிழ்த் தேசியம் என்றால் என்ன, புலிகளை ஆதரித்தால் அவர்கள் தமிழ்த் தேசியவாதிகள், மாற்றுக் கருத்துடையோர் துரோகிகள் என்றும் எழுதப்படாத பொது விதி இங்கு உண்டு. அவரவர் இருப்பு நிலையை உணர்ந்தே தமிழ் தேசிய வாத வரைவிலக்கணமும் இருப்பியலாளர்களின் நகர்வுகளை மையப்படுத்தியே கட்டமைக்கப்படுகிறது. இதற்கு எழும் வாழ்வொழுங்கு நடைமுறையும் பெரும் செல்வாக்கு செலுத்துகின்றன. இவை மாறுபட்ட காழ்ப்புணர்வு கருத்தியல் தோற்றமும் உண்டு. இவை காலத்தால் நின்று நிதானமாக நிலைத்து நிமிர்ந்து எழுந்து நிதானிக்க கூடிய ஏது நிலைகளை ஒருமித்த கருத்துடையவர்களை ஒப்புவித்து வெளிப் படுத்தும் ஓர் யுக்தி ஆகும்.


வி.எஸ்.சிவகரன்

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் திடீர் தமிழ்த்தேசியவாதம் என்பது பலரை வியக்க வைத்துள்ளது. சிலரை விமர்சிக்க வைத்துள்ளது. கடந்த 14 ஆண்டுகளாக எதையெல்லாம் கேள்விக்கு உட்படுத்தி எதிர் விவாதம் செய்தாரோ அதற்கு நேர் மாறாக தூய தமிழ்த்தேசியம் பேசும் நிலையை தமிழரசுக்கட்சியின் தலைமைத்துவ தோல்வி கற்றுக் கொடுத்திருக்கிறது. தமிழ் மக்களின் நாடித்துடிப்பை எண்ணத்து உணர்வுகளையும் புரிந்து கொள்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு 14 ஆண்டுகள் தேவைப்பட்டிருக்கிறது என்பது மிக நீண்ட காலமே. அரசியல் என்பது காலத்துக்கு காலம் மக்களின் அடிப்படை உணர்வுகளைப் புரிந்து கொண்டு, அதற்கு ஏற்ற வகையிலே நகர்வியல் போக்கு கோட்பாட்டு சித்தாந்தத்திற்கு குறை ஏற்படாத வகையில், நின்று நிதானமாக சமயோசிதமான அணுகு முறையுடன் நகர்த்துவோர்களையே தேர்தல் அரசியல் கடந்தும் இருப்பை நிலை நிறுத்த முடியும் என்பதே வகுக்கப்படாத நடப்பு விதி. இதை சுமந்திரன் புரிந்து கொள்ளாமல் நகர்ந்ததே தோல்விக்கு அடிப்படை காரணமாக இருக்கலாம். யதார்த்த வெளிப்படைத்தன்மையும் பல சந்தர்ப்பத்தில் எதிராக மாறுவதுண்டு. யாவகராயினும் நா காக்க.

அறிவு, ஆளுமை, ஆற்றல், வல்லமை, மொழிப் புலமை, தர்க்கவியல்நுட்பம், சட்டப்புலமை, இராஜதந்திர – இராஜிக அணுகுமுறை, வெளிப்படைத்தன்மை, பேச்சாற்றல் – இவை எல்லாம் இருந்தும் தமிழ் மக்களின் இதயத்தால் நேசிக்க கூடியவராக இருக்கவில்லை. இன விடுதலைக்குப் போராடிய இனம் தனது வலி சுமந்தவர்களையும் அதை உணர்ந்து புரிந்து கொண்டவர்களையும்தான் தலைவர்களாக அழகு பார்க்கும். சுமந்திரனை அரசியலுக்கு அழைத்து வந்த சம்பந்தன் அவர்களும் ஒரு வலிமையான தூய தமிழ்த்தேசியவாதி இல்லை. சுமந்திரனின் அரசியல் அனுபவமின்றிய எல்லை மீறிய வார்த்தைகளை உடனுக்குடன் கட்டுப்படுத்தி, வழிபடுத்தி இருந்தால்

தொடர்ச்சி▼

# சுமந்திரனின் திடீர் தேசியம் கரையேறுமா?

**தொடர்ச்சி▲**

சுமந்திரனுக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்காது. ஆயுதப் போராட்டத்தை ஏற்றுக்கொள்ளாது, புலிகளையும் மனித உரிமைகள் விவகாரத்தில் விசாரிக்க வேண்டும் எனவும், சர்வதேச விசாரணை முடிந்து விட்டது எனவும், படிப்பறிவில்லாதவர்களும் வேலையில்லாதவர்களும் தான் வடகிழக்கில் போராடினர் என்றும், முஸ்லிம்கள் வெளியேற்றம் என்பது புலிகளின் இனச்சுத்திகரிப்பு என்றும் அவ்வப்போது விளித்து வந்ததன் விளைவே இந்நிலைமை. தமிழ் தேசிய நிகழ்வுகளில் பெரிய அக்கறை செலுத்த தவறியவையும் இதில் அடங்கலாம். அவரது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளும் இருக்கலாம். சந்தர்ப்ப சூழ்நிலைகளும் இருக்கலாம். அது அவரவர் மனப்பிரதிபலிப்பு.

ஆனால் தமிழ்த் தேசியத்திற்கு சுமந்திரன் மீது கூட்டுக் கோபம் உண்டு. துரோகிப் பட்டம் என்பது மிக மலிவாக ஏற்புடையது. மக்கள் மனங்களில் பதியக்கூடியது. 'எப்பொருள் யார்,யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' எனும் வள்ளுவ வாக்கை உணர்வுச் சிந்தனை ஒருபோதும் அறிவார்ந்து நோக்குவதில்லை. புலிகளின் தியாகத்தை மலினப்படுத்துபவர்களை தமிழ்த்தேசிய அரசியல் ஒருபோதும் இடமளித்ததில்லை. அதனால்தான் விக்னேஸ்வரன் ஆயுதப் போராட்டம் பற்றி தவறான புரிதலுடன் வடக்கு மாகாண சபை முதல்வராகிய போதும், ஒரு வருட காலத்தில் மக்களின் நாடித்துடிப்பை உணர்ந்தவராக தமிழ்த் தேசிய அரசியலை முதன்மைப்படுத்தி நகரத் தொடங்கினார். அதனால்தான் விமர்சனங்கள் கடந்தும், சிங்கள சம்பந்தி நிலையை மறந்தும், தமிழ் மக்கள் மிகப்பெரிய ஆதரவு வழங்கினார்கள். அதை அவர் தக்கவைக்க முடியாமல் தடுமாறவைத்து விட்டார். புலிகளுக்கு எதிராக இருந்து, பல்வேறு விதமான காட்டிக்கொடுப்பு, கூட்டிக்கொடுப்பு, கடத்தல் என ஒட்டுக் குழுக்கள் பல. புலிகளின் துரோகிகள் பட்டியலில் இருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி போன்ற கட்சிகளை புலிகள் ஏற்றுக் கொண்டதன் ஊடாக எருசலேம் நகரத்து புனித நீரும் காசியின் புண்ணிய தீர்த்தமும் தெளித்து துரோகி பட்டியலில் இருந்து தியாகி நிலைக்கு பாவம் விமோசனம் கொடுத்து உயர்த்தப்பட்டமை போல் உணர்ந்து கொண்டனர் .

அதனால்தான் இன்னும் அவர்கள் அரசியல் நகர்கிறது. இவர்களது கடந்த காலம் இலகுவில் எவரும் மறந்துவிட முடியாத கறை படிந்தவை. யுத்தத்தை நிறுத்தினால் புலிகளுக்கு ஒட்சிசன் கொடுத்த மாதிரி என்ற சித்தார்த்தன் கூட்டமைப்பில் சேர்ந்ததால் அவரும் தியாகி ஆகிவிட்டார். ஆகவே சுமந்திரன் தனது கடந்த கால தவறுகளை உணர்ந்து இதில் இருந்து தெளிந்து எழுந்தால் தமிழ் தேசியம் தனதாக்கிக் கொள்ளும் நிலை ஏற்படலாம்.

இதில் பட்டறிவு அனுபவத்தால் வருகின்ற உணர்வுத் தெளிவு, அரசியல் கடந்து, இலட்சிய இருப்பிற்கான செல்நெறியை தீர்மானிக்க வல்லதாக அமைய வேண்டும். தனது இன்றைய சகபாடிகளையும் விமர்சனத்திற்கு உட்படுத்த வேண்டும். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களினுடைய உணர்வுகளை நன்கு புரிந்து கொண்டு அவர்களின் மீள் வாழ்வுக்கும், காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்கவும் முள்ளிவாய்க்கால் திட்டமிட்ட இனப்படுகொலை என சான்றுப்படுத்தவும் தனது சட்ட புலமையை உப யோகப்படுத்த வேண்டும். வடக்கு – கிழக்கு எங்கும் பல்வேறு வழக்குகள் கட்டணம் பெறமல் நீதிமன்றங் களில் முன்னிலையாகுவது போல் தமிழர்களின் இலட்சிய வேட்கையான தாயகம், தேசியம், தன்னாட்சி, சுயநிர்ணய உரிமை – இக்கோட்பாட்டை நடைமுறை சாத்தியமாக்க இதய சுத்தியோடு உளப்பூர்வமாக பணியாற்ற வேண்டும் என்பதே சுமந்திரனை எதிர்ப்பவர்கள் கூட எதிர்பார்க்கும் விடயமாகும்.

அவ்வாறு தமிழ்த்தேசிய எழுச்சி நிலையில் தொடர்ந்தால் இன்றைய வாக்கு வணிகர்களின் தமிழ்த்தேசியவாத இருப்பு என்பது கேள்விக்குறியாக மாறக்கூடிய நிலை தோன்றலாம். ஆகவே சுமந்திரன் தன்னை ஒரு தூய தமிழ்த்தேசியவாதியாக நிலை நிறுத்த வேண்டிய கால நிர்பந்தத்துக்குள் நிர்கதி யாக்கப்பட்டுள்ளார் எனவே உணர முடிகிறது. ஆகவே நிலை தடுமாறாமல் இப்பயணத்தில் அவர் தொடர்ந்து பயணிக்க வேண்டும். அப்போதுதான் காலத்தால் உள்ளீர்த்துக் கொள்ளும் நிலை ஏற்படலாம். காலம் எந்த இடைவெளியையும் இதுவரை நிரப்பாமல் விட்டதில்லை. எனவே சுமந்திரனின் செயலே முடிவு றுத்தும் காலத்தால் கரையேற்றமா அல்லது கறிவேப் பிலையா என்பதை.

# அதிக மழையுடனான வானிலை தொடரும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவிப்பு

மழை மற்றும் காற்றுடனான வானிலை மாற்றம் ஏற்படுமென எதிர் பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டை சூழவுள்ள கடற்பிராந்தியங் களை அண்மித்து ஏற்பட்டுள்ள, பருவப் பெயர்ச்சிக்கு முன்னரான தளம்பல் நிலையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு காரணமாக எதிர்வரும் நாள்களில் அதிக மழையுடனான வானிலை நில வும் என வளிமண்டலவியல் திணைக் களம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டின் பல பகுதிக ளிலும் 100 மில்லி மீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகுமென எதிர்வுகூறப் பட்டுள்ளது.

நாட்டின் பல பகுதிகளிலும் பிற்பகல் வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென் மாகாணத்தில் 30 முதல் 40 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் எனவும் வளிமண்டல வியல் திணைக்களம் எதிர்வுகூறியுள் ளது.

இதனிடையே, அதிகரிக்கும் மழையு டனான வானிலையினால் பல்வேறு ஆறுகளின் நீர்மட்டம் அதிகரிக்கக் கூடுமென எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் தினங்களில் பெய்யக்கூடிய அதிக மழையினால் தெதுரு, மஹஓய, அத்தனகலு, களனி, களு, பெந்தர, கிங், நில்வளா, கிரம, ஊருபொக்க, கலா, மகாவெலி, மல் வத்து ஆறுகளை அண்மித்து வெள்ள அபாயம் ஏற்படக்கூடுமென நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேற்படி, ஆறுகளை அண்மித்து வசிக்கும் மக்கள் அவதானமாக செயற் பட வேண்டுமென அறிவுறுத்தப்பட் டுள்ளது.



# சம்பந்தனின் பெயரில் சுமந்திரன் கருத்துரைக்கின்றமை வலுவான சந்தேகத்தைத் தருகின்றது என்கிறார் சுரேஷ்

சம்பந்தனின் பெயரில் சுமந்திரன் கருத்துரைக்கின்றமை வலுவான சந்தேகத்தைத் தருகின்றது என அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்திருக்கின்றார் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

அவரது அறிக்கையின் முழு விவரம் வருமாறு:–

கடந்த சில மாதங்களாக தமிழ்ப் பொது ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாக தமிழ் தேசியப் பரப்பில் உள்ள அரசியல் கட்சிகளும் சிவில் அமைப்புகளும் தமது கருத்துகளை முன்வைத்து வருகின்றனர். பெருமளவிலான தமிழ் மக்கள் ஒரு பொது வேட்பாளரின் தேவையை உணர்ந்திருக்கின்றனர். இது தொடர்பாக பல்வேறுபட்ட கூட்டங்களும் நடைபெற்றுள்ளன. தமிழ் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகளை இணைத்து இவற்றை முன்னெடுத்துச் செல்வதற்கான ஒரு செயற்பாட்டுக்குழுவை அமைப்பதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தமிழரசுக் கட்சி ஒரு கட்சியாக முழுமையாக இணைந்து பணியாற்றுவதற்கு 19ஆம்திகதிவரை கால அவகாசம் கோரியிருந்தார்கள். வடக்கிலும் கிழக்கிலும் இருக்கக்கூடிய தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் இதற்கான தமது சாதகமான கருத்துகளையும் தெரிவித்து வருகின்றனர்.

ஆனால் தமிழரசுக் கட்சியின் போஷகராக இருக்கக்கூடிய – மூத்த தலைவராக பேசப்படுகின்ற – சம்பந்தன் அவர்கள் பொது வேட்பாளர் ஒருவர் இப்பொழுது தேவையில்லை என்றும் உள்ளக சுயநிர்ணய உரிமை மூலம் சமஷ்டி ஆட்சிமுறையை உருவாக்குகின்ற ஒஸ்லோ பிரகடனத்தைக் கைவிட்டுவிடக்கூடாது என்றும் தமிழரசுக் கட்சியின் மத்தியகுழு கூட்டத்தில் பொதுவேட்பாளர் தெரிவை அங்கீகரிக்கக்கூடாது என்றும் கூறினார் என சுமந்திரன் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

ஒரு பொது வேட்பாளர் தொடர்பாக தவறான – பிழையான – அதற்கு எதிரான – கருத்துகளைக் கொண்டிருக்கக்கூடிய சுமந்திரன் சம்பந்தன் இவ்வாறான கருத்துகளைக் கூறியிருக்கிறார் என்று சொல்வது வலுவான சந்தேகங்களை உருவாக்குகின்றது. சம்பந்தன் வயதில் முதிர்ந்த ஒரு அரசியல் தலைவர் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ஆனால் அவரது வயது முதிர்ச்சி என்பது அந்த முதிர்ச்சிக்கே உரிய பல்வேறுபட்ட உளவியல், உடலியல் மாற்றங்களுக்கு உட்பட்டிருப்பதுடன் அவர் பேசுவதை யாருமே புரிந்துகொள்ள முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. இத்தகைய ஒரு சூழ்நிலையில், சம்பந்தன் பொது வேட்பாளர் தொடர்பில் பல கருத்துகளைக் கூறியிருக்கிறார் என்பது பல கேள்விகளையும் எழுப்பியுள்ளது.

சம்பந்தன் நடமாட முடியாத சூழ்நிலையிலும், செயற்படும் திறனற்றவராகவும் இருக்கிறார் என்றும், அவர் நாடாளுமன்ற பதவியிலிருந்து விலக வேண்டும் என்றும் சம்பந்தன் அவர்களுக்கு பல்வேறு நெருக்கடிகளைக் கொடுத்தவர் சுமந்திரன் ஆவார். செயற்பட முடியாத – பேச்சாற்றல் குறைந்திருக்கக்கூடிய – ஒருவரின் கூற்றாக தனது தேவை கருதி அவற்றை முதன்மைப்படுத்தும் நடவடிக்கையில் சுமந்திரன் ஈடுபட்டு வருகிறார்.

தமிழ்ப் பொது வேட்பாளரின் தேவையையும் அவசியத்தையும் முழுமையாக உணர்ந்துகொள்ளாமல் எழுந்தமானமாக அது ஒஸ்லோ உடன்படிக்கையை கைவிட்டு விடுவதாக அமைந்துவிடும் என்று கற்பனை அடிப்படையில் கூறுவது தவறானதும் மக்களைத் தவறாக வழிநடத்துவதுமாகும். யுத்தத்தின் பின்னர் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் சம்பந்தன் தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதினேழு சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடாத்தியது. இதில் ஒஸ்லோ உடன்படிக்கை குறித்து எதுவும் பேசப்படவில்லை.

பின்னர் மைத்திரிபால சிறிசேன அவர்களது அரசாங்கத்தில் நான்கு வருடங்களாக ஒரு புதிய அரசியல் சாசனம் பற்றிப் பேசப்பட்டது. அப்போதும் ஒஸ்லோ உடன்படிக்கை குறித்து பேசப்படவில்லை.

ஆனால் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக சர்வதேசம் எதிர்பார்க்கும் ஜனநாயக வழியில் நின்று வரவிருக்கின்ற ஜனாதிபதி தேர்தல் களத்தை தமிழ் மக்கள் தமக்கு சாதகமாகக் கையாள வேண்டும் என்ற நோக்கில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதானது ஒஸ்லோ உடன்படிக்கைகளுக்கு விரோதமானது என்ற கருத்தை பொதுவெளியில் குறிப்பிடுவதும் அதற்கு எதிராகச் செயற்படுமாறு

தொடர்ச்சி▼



# சம்பந்தனின் பெயரில் சுமந்திரன் கருத்துரைக்கின்றமை வலுவான சந்தேகத்தைத் தருகின்றது என்கிறார் சுரேஷ்

தொடர்ச்சி▲

தமிழரசுக் கட்சியினரைக் கோருவதும் தமிழரசுக் கட்சி இது தொடர்பாக ஒரு சாதகமான முடிவை எடுத்துவிடக் கூடாது என்ற சிந்தனையின் வெளிப் பாடாகவே தோன்றுகின்றது.

சுமந்திரன் அவர்கள் பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களிலும் தவறானதும் பிழையானதுமான கருத்துகளை சரியான கருத்துகள்போல் பேசிவந் துள்ளார். உதாரணமாக ஐ. நா.சபையால் ஒரு நிபுணர்குழு அமைக்கப்பட்டு அந்தக்குழு ஓர் அறிக்கையை ஐ.நா. பொதுச் செயலாளரிடம் கையளித்திருந்தது. பின்பு அந்த அறிக்கை ஐ.நா. பொதுச்செயலாளரினால் மேல் நடவடிக்கைக்காக ஐ.நா மனித உரிமைகள் ஆணையகத்திடம் கைய ளிக்கப்பட்டது. இதனையே சுமந்திரன் அவர்கள் சர்வதேச விசாரணை முடிந்துவிட்டது என்றும், இனி உள்ளக விசாரணைகள் மூலம் தண்டனை வழங்குவது மட்டுமே மீதமுள்ள நடவ டிக்கை என்றும் கூறிவந்திருக்கின்றார். ஆனால் இன்றுவரை யுத்தக்குற்றங் களுக்கான சர்வதேச விசாரணை ஒன்றை மேற்கொள்வது தொடர்பாக தமிழர் தரப்பு தொடர்ந்தும் போராடி வருகின்றது. இதனைப் போலவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு பதிவு செய்யப்பட்ட கட்சி என்ற ஒரு பொய்யான விடயத்தையும் அவர் கூறி வந்திருக்கின்றார். ஆகவே தமிழ் மக்களைப் பிழையான பாதை யில் வழிநடத்தும் கைங்கரியத்தை அவர் தொடர்ச்சியாக செய்து வருகின்றார். அதன் இன்னொரு வெளிப்பாடாகவே தமிழ் பொது வேட்பாளர் தொடர்பான அவரது கருத்துகள் அமைகின்றன.

தற்போது களத்திலிருக்கக்கூடிய சிங்களத் தரப்பு வேட்பாளர்கள் யாரும் தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பாகவோ அல்லது தமிழ் மக்கள் அன்றாடம் எதிர்நோக்கும் காணி அபகரிப்புகள், சிங்கள குடியேற்றங்கள், பௌத்த சின்னங்களை நிறுவுதல், சைவ ஆலயங்களை இடித்து அழித்தல், மேய்ச்சல் நிலங்களில் சிங்கள மக்க ளைக் குடியேற்றுதல், தமிழ் மக்களின் பாரம்பரிய சின்னங்களை அரசு டைமை ஆக்குதல் போன்ற நடவடிக் கைகள் தொடர்பாக எந்தவிதமான கருத்துகளையும் கூறாமல் அதனை ஏற்றுக்கொண்ட பார்வையாளர்க ளாகவே இருந்து வருகின்றனர். இவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினை களைத் தீர்ப்பார்கள் என்றும் அவர்களது தேர்தல் விஞ்ஞாபனம் வரும்வரையில் நாங்கள் எத்தகைய நகர்வுகளையும் மேற்கொள்ளக் கூடாது என்றும் கருதுவது அபத்த மான செயற்பாடாகும்.

ஜனாதிபதி தேர்தல்களத்தில் ஒருவர் வெல்வதென்பது தமிழ் மக்க ளின் வாக்குகளிலும் தங்கியிருக் கின்றது. வடக்கு-கிழக்கில் இருக் கின்ற ஏறத்தாழ பன்னிரண்டு இலட்சம் வாக்குகள் என்பது ஒருவரின் வெற்றிக்கு மிகக் காத்திரமான பங்களிப்பைச் செலுத்தக்கூடியவை. இந்த நிலையில் யுத்தம் முடிந்து பதினைந்து வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் குறைந்தபட்சம் மாகா ணசபைத் தேர்தலைக்கூட நடத்தாமல் கடந்த ஐந்து வருடத்திற்கும் மேலாக மாகாணசபையின் நிர்வாகமற்ற சூழலில் இந்த நாட்டில் தேசிய இனப் பிரச்சினை என்ற ஒன்றே இல்லை என்றும் வெறுமனே பொருளாதாரப் பிரச்சினை மாத்திரமே இருக்கின்ற தென்றும் பேசிவரும் சூழ்நிலையில் இவை எதுவும் தீர்க்கப்படவில்லை என்பதை முழுமையாக வெளிக் காட்டவும் தமிழ் மக்களுக்கு நியாய மான தீர்வு தேவை என்பதை சிங்கள அரசியல் சமூகத்திற்கும் இராஜதந்திர சமூகத்திற்கும் வெளிப்படுத்தும் முகமாகவும் தமிழ் வாக்குகளை தமிழர் ஒருவர் பெற்றுக்கொள்வதன் ஊடாக இதனை வெளிப்படுத்த முடியும் என்பது அரசியல் அரிச்சுவடி அறிந்தவர்களுக்கு விளங்கும்.

இந்த நிலையில், தமிழ் தரப்புகள் ஒன்றுபட்டு செயற்பட வேண்டிய ஒரு காலகட்டத்தில் அனாவசியமான கருத்துகளை முன்வைத்து இந்த கோரிக்கைகளை முறியடிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதானது தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான முயற்சிகளை முறியடிப்பதாகவே அமையும். தமிழரசுக் கட்சி இந்த யதார்த்தங்களை உணர்ந்துகொண்டு இப்பொழுதாவது சரியான நேரத்தில் சரியான முடி வெடுக்கும் என்று நம்புகின்றோம். – என்று உள்ளது.




# மட்டு. கல்லடிக் கடற்கரையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

(பழுவூரான்)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று சனிக்கிழமை மாலை கல்லடி கடற்கரையில் கொட்டும் மழைக்கு மத்தியிலும் உணர்வு பூர்வமாக முன்னெடுக் கப்பட்டது.

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப் பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந் நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரத்தினம், ஈரோஸ் ஜனநாயக முன்னணி உறுப்பினர்கள், முன்னாள் மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினர்கள் உயிர் நீத்தோரின் உறவுகள், சமூக செயற் பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது உயிர்நீத்த உறவுகளின் ஆத்மா சாந்தி வேண்டி ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு,அகவணக்கம் செலுத் தப்பட்டு, மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.


















# மட்டக்களப்பு பிளையாரடியில் நினைவேந்தல்!

**(பழுவூரான்)**

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தின நிகழ்வு மட்டக்களப்பு பிள்ளையாரடி மன்றேசா பகுதியிலும் நேற்று உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

கிழக்கு சமூக அபிவிருத்தி அமைப்பின் ஏற்பாட்டில் அமைப்பின் பணிப்பாளர் புஹாரி மொகமட் தலைமையில் பொது மக்கள் ஒன்றிணைந்து முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அஞ்சலி நிகழ்வை உணர்வுபூர்வமாக முன்னெடுத்தனர்.

உறவுகளை இழந்த மக்கள், மதத்தலைவர்கள், மாணவர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் இதில் கலந்து கொண்டனர் .

முள்ளிவாய்க்கால் கஞ்சியினை நினைவு கூரும் வகையில் கஞ்சி காய்ச்சப்பட்டு சிரட்டைகளில் பொதுமக்களுக்கு பகிரப்பட்டது.




















# கிழக்கில் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் மூன்று மாவட்ட மக்களும் நினைவேந்தல்

(கனகராசா சரவணன்)

கிழக்கில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நேற்று இடம்பெற்றது. பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டு படுகொலை செய்யப்பட்ட தம் உறவுகளுக்குச் சாந்தி வேண்டி ஈகைச் சுடர் ஏற்றி 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்.

கிழக்கில் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு இலங்கை வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் அழைப்பு விடுத்தனர். இதனையடுத்து அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த் நூற்றுக்கணக்கானோர் நேற்று மட்டு. காந்தி பூங்காவில் ஒன்று திரண் டனர்

இவ்வாறு ஒன்று திரண்ட மக்கள் முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட் மக்களுக்கு நீதிவேண்டும் எனகோரி வெள்ளை கொடிகள் ஏந்திய வாறு ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர் அங்கு அமைக்கப்பட்ட நினைவேந்தல் பகுதியில் ஈகைச் சுடர் ஏற்றி உணர்வு பூர்வமாக மலர் தூவி இரண்டு நிமிட அஞ்சலி செலுத்தினர்.

இதனை தொடர்ந்து இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் மட்டக் களப்பு மாவட்ட இணைப்பாளரிடம் 8 கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை கையளித்தனர். தொடர்ந்து அங்கிருந்த அனைத்து பொதுமக்களுக்கும் கஞ்சி பரிமாறப்பட்டது.
















# உயிரிழந்தவர்களுக்கு வவுனியா நகரில் மூவின மக்களும் இணைந்து அஞ்சலி

**(வவுனியா நிருபர்)**

வவுனியாவில் போரால் உயிரிழந்தவர்களுக்கு மூவின மக்களும் இணைந்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வு ஒன்றை நேற்று மேற்கொண்டிருந்தனர்.

வன்னி மக்கள் ஒன்றியம் மற்றும் போரினால் உயிரிழந்த உறவுகளின் ஒருங்கிணைப்புக் குழு என்னும் அமைப்புக்களின் பெயரில் இந்த நினைவு அஞ்சலி நிகழ்வு நகரசபை மைதானத்தில் இடம்பெற்றது.

கண்டிய நடனம், மேளதாள வாத்தியம் என்பவற்றுடன் பௌத்த, இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மதத்தலைவர்கள், அரச சார்புக் கட்சி உறுப்பினர்கள் உட்பட்ட அதிதிகள் வரவழைக்கப்பட்டு விருந்தினர் மேடையில் அமரச் செய்யப்பட்டதுடன், மதத் தலைவர்களின் ஆசி உரைகளும் இடம்பெற்றது.

இதன்போது போரால் உயிரிழந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் நினைவாக தீபம் ஏற்றப்பட்டு மக்கள் அஞ்சலி செலுத்தியமையுடன் தென்னை மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன.
































# வவுனியாவில் நேற்று நடத்தப்பட்ட நினைவுகூரல் நிகழ்வில் சலசலப்பு

**(வவுனியா நிருபர்)**

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற உயிரிழந்தவர்களின் நினைவேந்தல் நிகழ்வில் குறித்த நிகழ்வு தொடர்பில் சலசலப்பு ஏற்பட்டிருந்தது.

வவுனியா நகரசபை மைதானத்தில் போரில் உயிரிழந்தவர்கள் நினைவாக மூவின மக்களின் நினைவேந்தல் நிகழ்வு என அறிவிக்கப்பட்டு அழைத்து வரப்பட்ட மக்கள் அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

இதன்போது அங்கு அறிவிப்பில் ஈடுபட்டவர்கள் விபத்தில் இறந்தவர்களுக்கான அஞ்சலி நிகழ்வு, வெற்றி பெற்றமைக்கான நிகழ்வு, போரில் உயிரிழந்தர்வர்களுக்கான நிகழ்வு, முள்ளிவாய்காலில் மரணித்தவர்களுக்கான நிகழ்வு என மாறி மாறி அறிவிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இதனையடுத்து நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் இது போரில் இறந்தவர்களின் நிகழ்வு என அறிவிக்கும்படி தெரிவித்திருந்தனர். இதனால் குறித்த நிகழ்வு எதற்காக என மக்கள் மத்தியில் சலசலப்பு ஏற்பட்டிருந்தது. ஏற்பாட்டுக் குழுவின் நடவடிக்கைக்கு அங்கு வந்திருந்த இளைஞர்கள் சிலரும் விசனம் தெரிவித்து முரண்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மக்கள் மழை பெய்யத் தொடங்கியதும் மழையில் நனைந்து கொண்டிருந்த போது உரையாடல்கள் இடம்பெற்றுக் கொண்டிருந்தமையாலும் அங்கு சலசலப்பு ஏற்பட்டு மக்கள் தீபம் ஏற்றிவிட்டு வெளியேறிச சென்றிருந்தனர். இதனையடுத்து அதிதிகளான மதத்தலைவர்களும் அங்கிருந்து வெளியேறிச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.
































# மன்னார் பஜார் பகுதியில் நினைவேந்தல்

(மன்னார் நிருபர்
எஸ்.ஆர்.லெம்பேட்)

இறுதிப் போரில் உயிர் நீத்த உறவுகளை நினைவுகூரும் முள்ளிவாய்க்கால் 15 ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்றைய தினம் தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் மன்னார் பஜார் பகுதியில் உள்ள தந்தை செல்வா சிலைப் பகுதியில் இடம்பெற்றது.

இதன் போது முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுச்சுடரை அருட் தந்தை அவிதப்பர் அடிகளார் ஏற்றி மாலை அணிவித்து நினைவேந்தலை ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து மக்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து மக்களுக்கு முள்ளிவாய்க் கால் நினைவு கஞ்சி வழங்கப்பட்டது. இந்த நினைவேந்தல் நிகழ்வில் அரசியல் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.






















# 15 ஆண்டுகள் நீதி கிட்டாமல் அவமே கடந்ததுதான் மிச்சம்

## தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம் விசனம்

இதேவேளை இறுதிப் போரில் உயிர் நீத்த உறவுகளை நினைவு கூரும் முள்ளிவாய்க்கால் 15 ஆவது ஆண்டு நினைவேந்தலை யொட்டி தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் வருமாறு:-

தமிழின படுகொலையின் பதினைந்து ஆண்டுகள் ஆகியும் எதுவுமே மாறவில்லை.

இனப்படுகொலை நடைபெற்று 15 ஆண்டுகள் ஆகிய போதும் எந்த மாற்றமும் நிகழவில்லை. பல்வேறு விதமான ஆணைக் குழுக்கள் அனைத்தும் பயனற்றுப் போனது. தமிழ் அரசியல்வாதிகளும் ஒழுங்கு முறையான திட்டமிட்ட தொடர் நடவடிக்கை எதையும் இனப்படுகொலை விவகாரத்தை முன்னோக்கி நகர்த்தவில்லை.

அரசாங்கத்தினால் தொடர்ந்தும் மனித உரிமை மீறல்களும், ஒடுக்கு முறையும், தனிமனித பேச்சுச் சுதந்திர அடக்கு முறையும், பயங்கரவாத விசாரணைகளும், அச்சுறுத்தல்களும், சிவில் செயற்பாட்டில் இராணுவ தலையிடும், பௌத்த ஆக்கிரமிப்பும், ஏகாதிபத்தியமும்,, மாற்றுக் கருத்துக்களை முடக்குவதும், சிவில் செயற்பாட்டாளர்களை அச்சுறுத்துவதும் என செயற்பாடுகள் தொடர்கின்றன.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் மனங்களில் எந்த மாற்றத்தையும், ஏற்றத்தையும், இந்தக் காலவோட்டம் ஏற்படுத்தவில்லை. மாறாக தொடர்ந்து வலியையே ஏற்படுத்தி வருகிறது.

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் எந்த முன்னேற்றமும் நிகழவில்லை. ஐ .நா. மனித உரிமைகள் ஆணையகம் அர்த்தம் இல்லாத - நடைமுறைச் சாத்தியமற்ற - தீர்மானங்களை காலத்துக்கு காலம் எடுத்ததே தவிர, அதனால் பாதிக்கப்பட்ட தரப்பிற்கு எந்த மாறுதலும் நிகழவில்லை. வெறும் காகிதங்களுடன் விடயம் முடங்கிப் போனது.

மனித உரிமை ஆர்வலர்கள் என உலகின் பல பாகங்களிலும் இருந்து இங்கு வந்து எம்மை வேடிக்கை பார்த்தனரே தவிர, நீதியை நிலைநாட்ட வில்லை. உலகின் எல்லா கனவான்கள் என வேடம் தரித்தவர்கள் சேர்ந்தே முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை அரங்கேற்றினார்கள். அவர்களிடம் நீதியை எப்படி எதிர்பார்க்க முடியும்? இந்த உலகம் வலியோனுக்கு நீதியை வழங்கியதே தவிர, அறத்தை நியம நியதிகளுக்குள் ஒருபோதும் நிலை நாட்டியதாக எங்கும் வரலாறு இல்லை. எல்லாம் நலன் சார்ந்த நிகழ் தகவுகளே.

அநீதியை விதைத்தவனிடம் நீதியின் நிர்ணயத்தை எதிர்பார்க்க முடியுமா? இலங்கை அரசு மட்டுமல்ல, சர்வதேசமும் எம்மை தொடர்ந்து ஏமாற்றுகிறத. ஏமாற்றியது இனப்படுகொலையின் பங்குதாரராகியது.

நீதி போதிக்கும் - சம தர்மம், மனித உரிமை, வாழ்வியல் உரிமை என உச்சரித்தபடி அநீதிக்குத் துணை போகும் நீதி இல்லா நாதியற்ற போலி கனவான்களே! இனியாவது உங்கள் ஏமாற்று வேலையை நிறுத்திக் கொள்ளுங்கள். இந்த உலகம் இனியும் உங்களை நம்பத் தயாராக இல்லை. 15 ஆண்டுகளில் உங்கள் ஏமாற்று வித்தைகளை எல்லாம் பாதிக்கப்பட்ட தரப்புகள் நன்கு உணர்ந்து விட்டன.

ஆகவே எமக்குள் நாம் பேதங்களை கடந்து இனத்துவ, மொழித்துவ, வாழ்வியல், சுயநிர்ணய உரித்துக்களைப் பெற ஒருமித்து ஒருங்கிணைவதே ஒரே வழி.

அதுதான் எமக்கான நீதியை நாமே பெற்றுக் கொள்வதற்கான வழியும் கூட. 15 ஆண்டுகள் வெறுமையாக பயனின்றி கடந்து விட்டது என்பதே கசப்பான உண்மை.

இதற்கு வல்லான்மை அற்ற தமிழ் தலைவர்களும் பொறுப்புக் கூற வேண்டும். ஆகவே தமிழர் ஒரே தேசமாக திரள்வோம். அதுவே நமக்கான இன்றைய தேவை. இல்லையேல் முள்ளிவாய்க்காலில் மரணித்த ஆன்மாக்கள் நம்மை ஒருபோதும் மன்னிக்கா.

அது நிகழாத வரை சிங்கள தேசம் நம்மை பிரித்தாளும் வேலையே தொடர்ந்து செய்யும். ஆகவே விழித்துக் கொள்ள வேண்டியது நாம் தான். - என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.




# இலங்கை அரசினதும் சர்வதேசங்களினதும் கவனயீனமான போக்கால் 15 வருட தாமதம்

## நீதி மறுப்புக் குறித்து மன்னிப்புச் சபையின் செயலாளர் முள்ளிவாய்க்காலில் வைத்து ஆணித்தரமாகக் கருத்து

இலங்கையில் மூன்று தசாப்த காலமாக நிலவிய ஆயுதம் தாங்கிய உள்ளகப் போரில் பாதிக்கப்பட்ட பலருக்கு நீதியை பெற்றுக் கொடுப்பதற்கு தவறிய இலங்கைய அதிகாரத் தரப்புகள் மற்றும் சர்வதேச சமூகத்தின் இணைந்த கவனயீனமான செயற்பாட்டையே இன்றைய 15 வருட பூர்த்தி நினைவூட்டுகின்றது என சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் ஆக்னெஸ் காலமர்ட் அம்மையார் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் தின நினைவேந்தல் நிகழ்வில் நேற்றைய தினம் கலந்து கொண்டு யுத்தத்தில் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தியதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைஜ் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் –

இலங்கையில் மூன்று தசாப்த காலமாக நிலவிய ஆயுதம் தாங்கிய உள்ளகப் போரில் பாதிக்கப்பட்ட பலருக்கு நீதியை பெற்றுக் கொடுப்பதற்கு தவறிய இலங்கைய அதிகாரத் தரப்புகள் மற்றும் சர்வதேச சமூகத்தின் இணைந்த கவனயீனமான செயற்பாட்டை இன்றைய 15 வருட பூர்த்தி நினைவூட்டுகின்றது.

15 வருடங்களுக்கு முன்னர் யுத்தத்தின் இறுதி நாள்களில் பெருமளவான அப்பாவி பொது மக்கள் உயிர் நீத்த பகுதியில் இன்று நாம் மிகவும் துயரத்துடன் நிற்கின்றோம்.

இந்த நிகழ்வுக்கு முன்னதாக, யுத்தத்தின் போது தாம் இழந்தவர்களை நினைவுகூரும் வகையில் தமிழ் சமூகத்தார் முன்னெடுத்திருந்த முயற்சிகளை தடுக்கும் வகையில் கைதுகள், பலவந்தமாக தடுத்து வைப்புகள் மற்றும் வேண்டுமென்றே தவறான கருத்துகளை பரப்பியிருந்தமை போன்ற சம்பவங்களை நாம் அவதானித்திருந்தோம்.

உயிர்நீத்தவர்களை நினைவுகூரவும், தமது அன்புக்குரியவர்களுக்காக அமைதியான முறையில் ஒன்றுகூடி தமது உணர்வுகளை வெளிப்படுத்துவதற்குமான உரிமைக்கு அதிகாரத் தரப்பினர் மதிப்பளிக்க வேண்டும்.


யுத்தத்தில் இரு தரப்புகளிலிருந்தும் சர்வதேச சட்டங்களையும், சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதநேய சட்டங்களையும் மீறும் வகையிலான குற்றங்கள் புரியப்பட்டுள்ளமை தொடர்பில் போதியளவு ஆதாரங்கள் காணப்படுகின்றமையை ஐக்கிய நாடுகளின் விசாரணைகள் இனங் கண்டுள்ள போதிலும், அவ்வாறான பாரதூரமான குற்றங்கள் தொடர்பில் பக்கசார்பற்ற அல்லது சுயாதீனமான தேசிய விசாரணைகளை முன்னெடுப்பது தொடர்பில் எவ்விதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

அத்துடன், யுத்தத்தின் போது வலிந்து காணாமலாக்கப்பட்ட குடும்பங்களின் எஞ்சியுள்ள அங்கத்தவர்கள், தமது அன்புக்குரியவர்களை தொடர்ந்தும் தேடிய வண்ணமுள்ளனர். பாதிக்கப்பட்டவர்கள் தமக்கான நீதியை நீண்டகாலமாக தேடுவதை அவர்களிடமிருந்து அறிந்து கொள்வது மிகவும் மன உளைச்சலை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு பதிலளிப்பதற்கு இலங்கை அரசாங்கம் சிறந்த தீர்வாக அமைந்திருந்த போதிலும், கடந்த 15 வருட காலப்பகுதியில் பொறுப்புக் கூறலுக்காக உள்ளகக் கட்டமைப்பை நிறுவுவதற்காக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு முயற்சிகள் வெறும் கண்துடைப்புகளாகவே அமைந்திருந்தன.

இந்த வாரத்தின் முற்பகுதியில் ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகரினால் வெளியிடப்பட்ட அறிக்கையுன், இலங்கையின் பொறுப்புக்கூறல் செயற்பாடுகளில் காணப்படும் இடைவெளிகள் காரணமாக, இந்த விடயம் தொடர்பான கறைகள் மாறாமல் காணப்படுவதை வலியுறுத்தியிருந்தது.

உண்மை, நீதி மற்றும் இழப்பீடு போன்றவற்றுக்காக இன்றும் ஆயிரக்கணக்கான பாதிக்கப்பட்டவர்கள் காத்திருக்கின்றனர். இன்று முள்ளிவாய்க்காலில் நாம் அவர்களுடன் உறுதியாக கைகோர்த்துள்ளோம். – எனவும் தெரிவித்தார்.



# முன்னர் தடையுத்தரவு விதிக்கப்பட்ட அதே பாண்டிருப்பில் நினைவேந்தல்!

( வி.ரி.சகாதேவராஜா)

முன்னர் தடையுத்தரவு விதிக்கப்பட்ட அதே பாண்டிருப்பில் நேற்று சனிக்கிழமை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நடாத்தப்பட்டது.

பெரிய நீலாவணை பொலிஸாரின் மனுவை ஏற்று கல்முனை நீதிவான் நீதிமன்றம் முன்னர் தடையுத்தரவைப் பிறப்பித்திருந்நது.

அத்தடையுத்தரவுக்கு எதிராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச தலைவரும் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், மற்றும் காரைதீவு விநாயகம் விமலநாதன் ஆகியோர் நகர்த்தல் மனுவை சட்டத்தரணிகளூடாக சமர்ப்பித்தன் பேரில் நீதிமன்றத்தினால் அத்தடையுத்தரவு நேற்று வெள்ளிக்கிழமை விலக்கி கொள்ளப்பட்டது.

அதன் பயனாக பாண்டிருப்புத் திரௌபதி அம்மன் ஆலயத்தின் முன்றிலில் நேற்றய் சனிக்கிழமை தமிழ் தேசிய மக்கள் முன்னணி இணைப்பாளர் துஷாந்தன் ஏற்பாட்டில் சுடரேற்றி கஞ்சி வழங்கப்பட்டது.

இதில் இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச தலைவரும் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் பிரதான பிரமுகராகக் கலந்து கருத்துரைத்தார்.

கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர்களான க.சிவலிங்கம், பொ. செல்வநாயகம், திருமதி சுமித்ரா, சமூக செயற்பாட்டாளர் விநாயகம் விமலநாதன் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர். ஆலய வளாகத்தில் அச்சமயம் அதிகளவான பொலிஸார் குவிக்கப்பட்டி ருந்தனர். உறவுகளை நினைவு கூர்ந்து கஞ்சி வழங்கப்பட்டது.














# வவுனியா - பண்டாரிக்குளத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழுங்கல்

**(கே.வசந்தன்)**

முள்ளிவாய்கால் 15 ஆம் நினைவு நாளை முன்னிட்டு வவுனியா, பண்டாரிக்குளத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழுங்கி வைக்கப்பட்டது.

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் உள்ள இளைஞர்கள், ஓட்டோ உரிமையாளர்கள் பலர் இணைந்து கஞ்சியை பண்டாரிக்குளம் பிரதான வீதியில் வைத்துப் பரிமாறினர்..

2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின் போது மக்கள் முள்ளிவாய்கால் கஞ்சியினை உணவாக உட்கொண்டே உயிர் பிழைத்தனர். அதன் 15 ஆவது ஆண்டினை நினைவு கூர்ந்தும், அடுத்த தலைமுறைக்கு வரலாற்றை கடத்தும் நோக்குடனும் இவ்வாறு கஞ்சி வழுங்கப்பட்டது.

வீதியால் சென்ற பலரும் அதனை வாங்கிப் பருகிச் சென்றமை குறிப்பிடத்தக்கது.
















# கொழும்பு வெள்ளவத்தையிலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

தலைநகர் கொழும்பு வெள்ளவத்தையிலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நேற்று சனிக்கிழமை காலை 09.00 மணிக்கு பொலிஸாரின் கெடுபிடிகளுக்கு மத்தியில் நடைபெற்றதாக சிவில் சமூக செயற்பாட்டாளர் ராஜ்குமார் ரஜீவ்காந்த் தெரிவித்தார்.

அதேவேளை, இந்த நிகழ்வு நடைபெற்ற இடத்தில் மற்றுமொரு குழு கடுமையான எதிர்ப்பை வெளியிட்டது.

நிகழ்வு நடைபெற்றபோது பொலிஸாரின் பாதுகாப்புடன் எதிர்ப்பு வெளியிட்ட குழுவினர் கோஷம் எழுப்பினர்.

இதன்போது நிகழ்வினை குழப்ப முயன்ற ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சிங்கள, தமிழ் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஒன்றிணைந்து இந்த நிகழ்வை வெள்ளவத்தை கடற்கரையில் நடாத்தியபோது இந்த எதிர்ப்புகளைச் சந்தித்தனர்.

ஆனாலும் முள்ளிவாய்க்கால் நிகழ்வை திட்டமிட்டவாறு ஏற்பாட்டாளர்கள் நடத்தி முடித்தனர்.

பொலிஸாரின் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் நூற்றுக்கணக்கான மக்கள் இந்நிகழ்வில் பங்குபற்றினர். தீபமேற்றி வணக்க நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இதன்போது சமயத் தலைவர்களும் கலந்துக்கொண்டனர்.

பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டிருந்த போதும் அச்சமின்றி மக்கள் நிகழ்வில் கலந்துக்கொண்டனர். இதன்போது முள்ளிவாய்க்கால் கஞ்சியும் பரிமாறப்பட்டது.

வெள்ளவத்தையில் பெருமளவு தமிழர்கள் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

2022 ஆம் ஆண்டு கோட்டாபய ராஜ பக்ஷவெள ஜனாதிபதி பதவியிலிருந்து நீக்குவதற்காகக் கொழும்பு காலி முகத்திடலில் போராட்டம் நடைபெற்ற போது முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு அங்கும் நடத்தப்பட்டிருந்தது.









# இன்றைய ராசி பலன்கள் - 19.05.2024




இன்றைய நாள் நீங்கள் விரும்பத்தக்கதாக இருக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். இன்று பயனுள்ள திட்டங்களை தீட்டுவீர்கள். அது உங்களுக்கு சாதகமான பலன்களைத் தரும்.

உங்கள் பணியில் சாதகமான பலன்கள் கிடைக்கும். அதிகப்படியான பண வரவு ஊக்கத் தொகையாக கிடைக்க வாய்ப்புள்ளது.

உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பணம் சம்பாதிப்பதற்கான வலுவான அடித்தளத்தை அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.




இன்றைய நாள் சுமூகமாகவும் வெற்றிகரமாகவும் அமைய நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்த வேண்டும். ஸ்ரீ லட்சுமி நரசிம்மரை வணங்குவதன் மூலம் மகிழ்ச்சி கிடைக்கும்.

இன்று உங்களுக்கு வெளியிலிருந்து ஊக்கம் கிடைக்காது. உங்களை நீங்களே ஊக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். திட்டமிட்டு செயலாற்றுவதன் மூலம் பணிகளை குறித்த நேரத்துக்கும் முடிப்பீர்கள். எதிர்பாராத வகையில் வரும் பணிகளையும் முடிப்பீர்கள்.

உறவு என்று வரும் போது நீங்கள் அதனை லேசாக




இன்றைய நாள் பயனுள்ளதாக இருக்காது. என்றாலும் வருத்தப்படுவதை குறைத்துக் கொண்டு, உங்களுக்கு விருப்பமான விஷயங்களுக்காக நேரத்தையும் திறமையையும் பயன்படுத்துங்கள். தியானப் பயிற்சி சிறந்தது. குழப்பங்களுக்கு இடம் கொடாமல் தெளிவாக எண்ண வேண்டும்.

உங்கள் நாளை திட்டமிட்டு பணியாற்றுங்கள். பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் அன்றாட பணிகளுடன் வேறு பணிகளையும் ஆற்றுவீர்கள்.

உங்கள் உணர்சிகளை முறையாக கட்டுப்படுத்த வேண்டும். இதனால் உறவுப் பிணைப்பு பாதிக்கப்படும்.

இன்று அதிர்ஷ்டமான நிதிநிலைமை காணப்படாது. பணம் சம்பாதிக்கும் திறமையை வளர்த்துக் கொள்ளுங்கள். கண்டிப்பாக நல்லது நடக்கும்.

முடிந்தவரை பதற்றமின்றி இருக்க முயலுங்கள்.




இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி உங்களுக்கு சாதகமாக அமையும் நாள். மிகவும் அற்புதமான நாள். உங்கள் முடிவெடுக்கும் திறமையில் முன்னேற்றம் காணப்படும். உங்களிடம் உறுதி காணப்படும்.

உங்கள் பணியைப் பொறுத்தவரை சிறப்பான நிலையில் இருப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கப்பெறுவீர்கள். உங்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் கருத்துக்களை உங்கள் துணையுடன் இனிமையான முறையில் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் பராமரிக்கப்படும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு நிலை உயரும்.

இன்று மொத்தத்தில் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நல்ல தேக ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும். இன்று பொறுமை அவசியம். இன்று உங்கள் பொறுப்புகள் அதிகமாக காணப்படும்.

பணியிடத்தில் பரபரப்பு காணப்படும். திட்டமிட்டு முன்னுரிமைப்படி பணியாற்றினால் எல்லாப் பணிகளையும் எளிதாக முடிக்கலாம்.

ஒருவருக்கொருவர் பரஸ்பரம் அன்பை பரிமாறிக் கொள்வது, அதுவும் கஷ்ட நேரங்களில் பரிமாறிக் கொள்வது உறவில் மிகவும் அவசியம். அவர் விரும்பும் வகையில் நடந்து கொள்வது சிறந்தது.

சிறு கடன்கள் மூலம் உங்கள்அடிப்படை தேவைகளை எளிதாக சமாளிக்கலாம்.




ஆன்மீக சொற்பொழிவுகள் கேட்டல் மற்றும் அடிக்கடி கோவிலுக்கு செல்வது மனதுக்கு ஆறுதல் தரும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். தியானம் மேற்கொள்வது சிறந்த பலனைத் தரும். செயல்களை திட்டமிட வேண்டும் மற்றும் அதன்படி முடிக்க வேண்டும். அப்பொழுதான் அவை உங்கள் கட்டுப்பாட்டில் இருக்கும், தேவையற்ற செயல்கள் செய் வதை தவிர்க்க முடியும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பதில் கவனம் செலுத்த வேண்டும். உறவு சம்பந்தமான விருப்பு வெறுப்புகளைப் பற்றி உங்கள் துணையிடம் பேசி தெரிந்து கொள்ள வேண்டும். அதனால் நல்ல புரிந்துணர்வும் உறவுப் பிணைப்பில் வலுவும் ஏற்படும்.

பயணத்தின் போதும் பணத்தை கையில் கொண்டு செல்லும் போதும் கவனமாக இருக்க வேண்டும்.




நீங்கள் அதிகப்படியாக செயலாற்றினால் வெற்றியைக் காண நேரலாம். உங்களின் நகை மற்றும் விலை மதிப்புள்ள பொருள்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். எச்சரிக்கையாக இருப்பதன் மூலம் பாதகமான விளைவுகளை தவிர்கலாம்.

இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும். நீங்கள் சாதாரணமாக செய்வதை விட இன்று கூடுதலாக செயல் பட வேண்டும். என்றாலும் திட்டமிட்டு செயலாற்றினால் நீங்கள் நன்மை காணலாம். பணியின் தரத்தில் கவனம் தேவை. வேலை தொடர்பான பயணம் காணப்படும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். உங்கள் அன்பும் அரவணைப்பும் உங்கள் இருவருக்குமான உறவை வளர்க்க உதவும்.




இன்று இனிமையான சாதகமான நாள். இன்று நல்ல பலன்களைக் காண்பீர்கள். இன்றைய நாளை முறையாகத் திட்டமிடவும். முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

நீங்கள் எந்தப் பணி செய்தாலும் அதில் இன்று வெற்றி காண்பீர்கள். உங்கள் பணியைக் கண்டு உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

உங்கள் துணையுடன் பேசி அளவளாவுவீர்கள். இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொண்டு நடந்து கொள்வீர்கள். ஒருவரின் கருத்துக்கு மற்றவர் மதிப்பு அளிப்பீர்கள்.

பணம் அபரிமிதமாக காணப்படும். அதனை உங்களின் நலனுக்கு பயன்படுத்துவீர்கள். பணத்தை சிறந்த முறையில் செலவு செய்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 19.05.2024




இன்று உங்களுக்கு சிறப்பான நாள். உங்கள் அக்கம் பக்கத்தவரின் ஆதரவு கிடைக்கும். இன்று அனைத்தும் சிறப்பாக நடக்கும். இன்று நல்ல பலன்கள் கிடைக்கும்.

உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். அவர்கள் உங்களை பாராட்டுவார்கள். உங்கள் கடின உழைப்பு மற்றும் திறமை வெளிச்சத்துக்கு வரும்.

உங்கள் துணையுடன் விருந்து விசேஷங்களில் கலந்து கொள்ள வேண்டிய நேரம். இதில் நீங்கள் பங்கு கொண்டு மகிழ்வீர்கள். உங்கள் துணையிடம் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வீர்கள்.

வெளி நாட்டிலிருந்து பணம் கிடைக்க வாய்ப்புள்ளது. உங்களுக்கு தேவைப் படும் பொழுது அந்தப் பணம் கிடைக்கும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று இறை வழிபாட்டில் ஈடுபடுங்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை வேறு ஒரு நாளைக்கு தள்ளிப்போடுங்கள்.

பணியிடத்தில் திட்டமிட்டு வேலை செய்தால் பலன் கிடைக்கும். உங்களின் நேர்மறையான அணுகுமுறை காரணமாக அதிகப் பணிகளையும் எளிதாக கையாள்வீர்கள்.

உங்கள் துணையிடம் பேசும் போது புரிந்துகொண்டு பொறுமையாக பேச வேண்டும். உங்கள் வார்த்தைகள் தவறாகப் புரிந்து கொள்ள வாய்ப்புளதால் கவனமாகப் பேச வேண்டும். உங்கள் துணையிடம் அன்பாகப் பழகுவதன் மூலம் நேர்மறையான விளைவுகள் காணலாம்.நீங்கள் அதிகமாக செலவு செய்வீர்கள். ஆனால் சிறப்பாக திட்டமிட்டால் பணம் குறைவாக செலவு செய்யலாம்.




இன்று சிறப்பான பலன்கள் கிடைக்காது. என்றாலும் அமைதியாக செயல்களை கையாண்டால் சரியாக செயலாற்றலாம். செயல்களை பொறுமையுடன் கையாளுங்கள்.

இன்று முன் கூட்டியே திட்டமிடலும் அதன்படி நடந்து கொள்வதும் கடினமாக இருக்கும். பணிகளை சரியான விதத்தில் கையாண்டால் சுமை குறைவாகத் தெரியும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இது மறக்க முடியாத நாளாக இருக்கும். இருவருக்கும் இடையே நல்ல பிணைப்பு ஏற்பட இருவரும் அனுசரித்து நடந்து கொள்வீர்கள். நல்ல வார்த்தைகளை பரிமாறிக் கொள்வதன் மூலம் இன்றைய நாளைச் சிறந்ததாக ஆக்கலாம்.




நீங்கள் மகிழ்ச்சியாக காணப்படுவீர்கள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம். இன்று அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும். வெற்றியின் உச்சத்துக்குச் செல்வீர்கள்.

உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். உங்கள் முயற்சி பாராட்டைப் பெறும். உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணி சிறியதாக இருந்தாலும் அதனை மகிழ்வுடன் சிறந்த முறையில் செய்வீர்கள்.

இன்று உங்களுக்கும் உங்கள் துணைக்கும் மிகவும் இனிமையான மகிழ்ச்சியான நாள். இருவரும் ஒருவரோடொருவர் நேரம் ஒதுக்கி கலந்து பேசலாம். அதே சமயத்தில் அமைதியைக் கையாள வேண்டும்.

இன்று கணிசமான பணம் சேமிப்பீர்கள். பங்கு வர்த்தகத்தின் மூலம் நல்ல பலன் கிடைக்கும்.

இன்று முழுவதும் நீங்கள் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள்.









# மக்கள் வங்கி, ஸ்ரீ தலதா மாளிகையின் 'பௌத்த நலன்புரி நிதியம்' புலமைப்பரிசில்









மக்கள் வங்கி மற்றும் ஸ்ரீ தலதா மாளிகை ஆகியன ஒன்றிணைந்து சமூக அக்கறையை வளர்க்கும் நோக்குடன் 'பௌத்த நலன்புரி நிதியம்' என்ற கல்விப் புலமைப்பரிசில் திட்டத்தை ஆரம்பித்துள்ளன.

கொழும்பு 02 இல் அமைந்துள்ள மக்கள் வங்கி தலைமை காரியாலயத்தில் அண்மையில் இந்த அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றது.

தியவனத நிலமே பிரதீப் நிலங்க தெல, மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ மற்றும் மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி, இது முகாமையாளர் கிளைவ் பொன்சேகா ஆகியோர் இந்தை நிகழ்வில் கலந்து சிறப்பித்துள்ளனர்.

இத்திட்டத்தை ஆரம்பித்து வைப்பதைக் குறிக்கும் வகையில் 'பௌத்த நலன்புரி நிதியத்திற்கு' நன்கொடையொன்றை மக்கள் வங்கி அளித்துள்ளதுடன், மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களையும் வழங்கியுள்ளது.

மக்கள் வங்கி மற்றும் ஸ்ரீதலதா மாளிகை ஆகியன ஒன்றிணைந்து, 1995 ஆம் ஆண்டில் முதன்முதலாக பௌத்த நலன்புரி நிதியத்தை ஸ்தாபித்திருந்ததுடன், இன, மத பேதமின்றி, எதிர்காலத்தின் சிற்பிகளான சிறுவர்களின் எதிர்கால நலனுக்கு இது மாபெரும் உரமாக அமைந்தது.

இத்திட்டத்தினூடாக பல்லாயிரக்கணக்கான சிறுவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் தமது கல்வியை சிறப்பாக்கியுள்ளனர்.

இப்புதிய திட்டமானது 2024 ஜூன் முதல் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. தற்போது வழங்கப்படுகின்ற நன்மைகளை அதிகரித்து, குறைந்த வருமானத்தை ஈட்டுகின்ற குடும்பங்களிலுள்ள பிள்ளைகளுக்கும் பயனளிக்கும் வகையில் வழங்கப்படவுள்ளது.

அதற்கமையாக, தரம் 6 முதல் 11 வரை கல்வி கற்கின்ற 2,000 மாணவர்களுக்கு இத்திட்டத்தினூடாக மாதாந்த புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளதுடன், நாடெங்கிலுமுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகள் மத்தியில் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் 10 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு, ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

ஐந்து ஆண்டுகளில் சுமார் 10 ஆயிரம் மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்குவதே இதன் நோக்கம். இத்திட்டத்தின் முதற்கட்டத்தில் மக்கள் வங்கியும் அதன் ஊழியர்களும் இந்நிதியத்திற்கு பங்களிக்கவுள்ளனர்.

மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ இது குறித்து கருத்து வெளியிடுகையில்,

"தேசத்தின் எதிர்கால தலைமுறைகளாகத் திகழும் சிறுவர்களுக்கு வாழ்வளிக்கின்ற வகையில், காலத்தின் தேவையாக அமைகின்ற ஒரு முயற்சியாகவே மக்கள் வங்கி மற்றும் ஸ்ரீதலதா மாளிகை ஆகியன இணைந்து நடைமுறைப்படுத்தும் இந்த பௌத்த நலன்புரி நிதிய கல்விப் புலமைப்பரிசில் திட்டத்தை நான் காண்கின்றேன்.

பல தசாப்தங்களாக, தேசத்தின் தங்கக்கிரீடத்தின் தாயகமான ஸ்ரீதலதா மாளிகையின் உத்தியோகபூர்வ வங்கியாளராக மக்கள் வங்கி திகழ்ந்து வருவதுடன், மிகவும் கௌரவமான உறவுமுறையையும் சிறப்பாகப் பேணி வந்துள்ளது.

ஸ்ரீதலதா மாளிகையில் இடம்பெறுகின்ற வருடாந்த எசல பெரஹறா உற்சவத்திற்கு பல தசாப்தங்களாக மக்கள் வங்கி அனுசரணையளித்து வந்துள்ளது. இப்புதிய திட்டத்தினூடாக எமக்கு இடையிலான பிணைப்பு மேலும் ஆணித்தரமாக நிலைநாட்டப்பட்டுள்ளது," என்று குறிப்பிட்டார்.








# வணிக நிறுவனங்கள் உயர்ந்த இடத்தை அடைய வாய்ப்பு வழங்கும் Cinnamon Life Integrated Resort

4.5 மில்லியன் சதுரஅடியைக் கொண்ட தொகுதி, பிரமிக்க வைக்கும் 30 மாடி கோபுரத்துடன் கூடிய இலங்கையின் முன்னணி கலப்புத் திட்டமான சினமன்ட் லைஃப் தனது புதிய அலுவலக இடரப்பரப்பின் ஊடாக வணிகங்கள் புதிய உயரத்தை அடைவதற்கான வாய்ப்பையும், அவற்றுக்குப் புதிய முகவரியையும் வழங்கவுள்ளது.

கொழும்பின் நிதி கேந்திரநிலையத்தின் மையப்பகுதியில் அதாவது கொழும்பு துறைமுக நகரத்துக்கும் பிரதான வீதிகளுக்கும் இடையில் அமைந்துள்ள சினமன்ட் லைஃப், கோப்ரேட் நிறுவனங்களுக்கு உயர்தர வாழ்க்கை முறையுடனான நவீன பணியிட வசதி, உணவு மற்றும் பொழுதுபோக்கு வசதிகள், சினமன்ட் லைஃப் ஹோட்டல்கள், கடைத் தொகுதிகள் மற்றும் குடியிருப்புக்களுடனான இடையறாத தொடர்புகளின் ஊடாக வணிகம், பொழுதுபோக்கு ஆகியவை ஒன்றாகக் கலந்த அனுபவத்தை வழங்கும்.

இந்த வணிகக் கோபுரத்தில் 24 மாடிகள் அலுவலக இடப்பரப்புக்காக ஒதுக்கப்பட்டிருப்பதுடன், ஐந்து மாடிகள் வாகனத் தரிப்பிடத்துக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு தளமும் 10,564 சதுரஅடியுடன் ஒப்பிடமுடியாத இடப்பரப்பைக் கொண்டமைந்திருப்பதுடன், பரந்துபட்ட வணிகங்களுக்கான தேவையை நிவர்த்தி செய்யக் கூடியதாகவும், அவற்றின் செயற்பாடுகள் மற்றும் வளர்ச்சிக்கு உகந்த சூழலையும் வழங்கக்கூடியதாக அமைந்துள்ளன.

இந்தக் கோபுரத்தின் ஒவ்வொரு தளத்திலும் அடுத்த தலைமுறைக்கான அலுவலக இடப்பரப்புக்கள், அடுத்த தலைமுறைக்கான தொழில்துறைக்கு முன்னேற இருக்கும் நிறுவனங்களுக்கு உறுதியளிப்பவையாக அமைகின்றன.

இதுபற்றி **John Keells Properties** நிறுவனத்தின் சொத்து முகாமைத்துவத்தின் தலைவரும், **John Keells Group** நிறுவனத்தின் பிரதித் தலைவருமான ருசிரு அபேசிங்க கருத்துத் தெரிவிக்கையில்,

“சினமன்ட் லைஃப் அலுவலக இடப்பரப்பானது இணைப்பு மற்றும் சௌகரியங்களுடன் உண்மையில் உலகளாவிய பணியிட கலாசாரத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

கோபுரத்தின் முக்கியத்துவம் எதிர்காலத்தை மையமாகக் கொண்ட வணிகங்களை நோக்கியதாகும். இது ஒரு வணிக மாற்றத்திற்கான மூலோபாய முதலீடு. உலகத் தரம் வாய்ந்த வசதிகள் மற்றும் மையமான இடத்துடன், புதிய உயரங்களை எட்டுவதை நோக்கமாகக் கொண்டவர்களுக்கு இது சிறந்த தெரிவாக அமையும்”– என்றார்.

NGage
GOODVOCACY & PR
A part of
Sri Lanka's Pioneering
Integrated Marketing
Communications Agency
Best Workplaces
Great Place To Work.
LKA 2020
Our organisation has been recognised as a Best Workplace in
Sri Lanka for 2020 by Great Place To Work ® in Sri Lanka




# Dialog Star Points மூலம் 'லிட்டில் ஹார்ட்ஸ்' இற்கு நன்கொடை




டயலொக் வாடிக்கையாளர்கள் அனைவரும் இன்னொரு முறையும் ஒன்றிணைந்து லிட்டில் ஹார்ட்ஸ் திட்டத்திற்கு ரூ. 18 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட தொகையை நன்கொடையாக அளித்துள்ளனர்.

இந்த முன்னெடுப்பு இலங்கை குழந்தைநல மருத்துவர் கல்லூரியினால் முன்னெடுக்கப்படுகிறது. 2016 முதல் இன்றுவரை 140 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட தொகையை Dialog Star Points நன்கொடையாக திரட்டியுள்ளது.

சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் 12 மாடிகள் கொண்ட இருதய மற்றும் தீவிர சிகிச்சை பிரிவை மேம்படுத்துவதற்கு உதவிக்கரம் நீட்டுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

2023ஆம் ஆண்டின் நன்கொடை தேவைப்படும் குழந்தைகளுக்கு உயிரைக் காக்கும் சுகாதார வசதிகளை வழங்குவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்யும்.

குறிப்பாக, நான்கு இதய அறுவை சிகிச்சை மையங்கள், ஒரு வடிகுழாய் பரிசோதனை கூடம், 100க்கும் மேற்பட்ட இதய, மருத்துவ மற்றும் பிறந்த குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சை படுக்கைகள், ஒரு என்பு மச்சை மாற்றுப் பிரிவு, மற்றும் மேம்படுத்தப்பட்ட இதய பரிசோதனை மற்றும் பயிற்சி வசதிகள் கொண்ட இப்பிரிவுக்கு இந்த நன்கொடைகள் பயன்படுத்தப்படும். லிட்டில் ஹார்ட்ஸ் போன்ற காரணங்களுக்காக மட்டுமல்லாமல், டயலாக் வாடிக்கையாளர்கள் SOS குழந்தைகள் கிராமங்கள் இலங்கை, HelpAge Sri Lanka, சிறுநீரக சங்கம், யுனிசெஃப், மனித நேய ஒன்றிணைவு போன்ற பல்வேறு தொண்டுப்பணிகளுக்கும் நன்கொடை அளித்துள்ளனர். இதன் மூலம் 2023ஆம் ஆண்டின் மொத்த நன்கொடை தொகை சுமார் இலங்கை ரூபாய் 22 மில்லியனை எட்டியுள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்த டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழும பிரதம வாடிக்கையாளர் அதிகாரி சாண்ட்ரா டீ சொய்ஸா ,

"லிட்டில் ஹார்ட்ஸ் போன்ற தன்னார்வ தொண்டு முன்னெடுப்புகளுக்காக தங்கள் Star PointsI மீண்டும் ஒருமுறை ஒன்று சேர்த்து வழங்கிய எங்கள் வாடிக்கையாளர்களுக்கு நாங்கள் மனமார நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இலங்கை மக்களின் வாழ்க்கையை செழிப்படையச் செய்யவும், சுயமேம்பாடடையச் செய்யவும் டயலொக் தொடர்ந்து உறுதிபூண்டுள்ளமைக்கு இது ஒரு சான்றாகும். ஒன்று சேர்ந்து பணியாற்றுகையில் அது உதவி தேவைப் படுவோருக்கு எத்தகைய மாற்றத்தை உருவாக்கியுள்ளது என்பதை கண்கூடாக கண்டுள்ளோம்" – என்றார்.

# யூனியன் வங்கி புதிய Digital வலயம் ராஜகிரியவில் திறக்கப்பட்டுள்ளது




யூனியன் வங்கி ராஜகிரிய கிளையில் உயர்தர வசதி கருதி தானியங்கி Digital வலயம் திறக்கப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர்கனிள் Smart வங்கிச் சேவை வசதியை விரிவுபடுத்தி வங்கியின் Digital பரிமாற்றல் முயற்சிகளின் ஒரு பகுதியாக. யூனியன் வங்கியின் Digital வலயமைப்புகள் வங்கியின் தலைமைக் காரியால மற்றும் Pettah கிளைகளில் சமீபத்தில் திறக்கப்பட்டுள்ளது.